
வார இதழ்
# தேசியம்
www.thesiyamnews.com
THESIYAM තේසියම්

WELLA HAIR DRESSING
WELLA
வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT

No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

இதழ் - 6 | 30.06.2023 - 06.07.2023 | வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 12 | விலை : ரூ.70.00



## 13ம் திருத்தம் இந்தியாவுக்கு கௌரவப் பிரச்சினை!


# மோடி – ரணில் சந்திப்பில் 13 தேறுமா? அல்லது தமிழர் அரசியலின் திசையே மாறுமா...?

பக்கம் 09


HE & SHE FASHIONS
Ultimate Destination for FASHIONS

NO. 323, 309, KASTHURIYAR ROAD, JAFFNA.

தேசியம்
ஆசிரியர் பீடம்
தொலைபேசி : +94 76 567 3339
மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com
இணையம் : www.thesiyamnews.com



## நாம் எங்கே போய்க் கொண்டிருக்கின்றோம்?



**தமிழ் மக்களுக்கு இது மிக நெருக்கடியான காலம்.**

யுத்தம் முடிந்து 14 வருடங்கள் காலத்தோடு கரைந்துவிட்ட பின்னரும் கூட, தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கும் தீர்வில்லை. அன்றாடப் பிரச்சினைகளுக்கும் முடிவில்லை.

விடுதலை நோக்கிய அபிலாஷைகளை தைரியத்தோடு சுமந்து வந்திருந்த தமிழர் தேசம், இன்று அரசியல் ரீதியாக ஒரே கொடியின் கீழ் ஓரணி திரள முடியாமல், பல கூறுகளாக பிரிந்து நிற்கின்றது.

தமக்கென எதையும் எதிர்பாராமல், விடுதலைக் கனவுகளை கண்களில் நிறைத்தப்படி, இளைஞர்களும், யுவதிகளும் ஆயிரக்கணக்கில் அணி திரண்டு, புதுமை பல நிறைந்த போராட்ட வரலாற்றை, தம் ரத்தத்தால் எழுதிவிட்டு, மண்டை ஓடுகளாகவும், எலும்புக் கூடுகளாகவும் மண்ணோடு மண்ணாக புதைந்து, சிதிலங்களாகவும், துகள்களாகவும் கலந்துவிட்ட தாயக பூமியில், இன்று பதவி வெறியும் சுயநல மோகமும், சந்தர்ப்பவாதமும் சலுகை அரசியலும் கொடிகட்டி கோலோச்சி நிற்கின்றன என்பது மறுக்கப்பட முடியாத உண்மை.

சுதந்திர கீதம் இசைத்து நின்ற அந்த நாள் – இளைய தலைமுறை என்ன?

போதைவஸ்துக்கும் பாலியல் வக்கிரங்களுக்கும், கொஞ்சம் கொஞ்சமாக பலியாகத் தொடங்கியிருக்கும் இன்றைய இளைய சந்ததி என்ன?

வீதி விபத்துக்கள் மிரட்டிக்கொண்டிருக்கையில், சந்திச் சண்டித்தனங்களும் ஆயுத அடாவடித் தனங்களும் தமிழர் தேசத்தில் அங்கும் இங்குமாக அரசோச்சத் தொடங்கியிருக்கும் கொடுமைதான் என்ன?

‘இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள்’ என்றால், நாளைய இளைஞர்களான இன்றைய சிறுவர்களோ, தமக்கு சற்று முந்திய தலைமுறைகளைப் பார்த்து சீரழியத் தொடங்கியிருக்கும் சோதனை தான் என்ன?

இவை எல்லாம் போதாது என்று, கருக்கலைப்புக்களும், தற்கொலை மரணங்களும், குடும்ப வன்முறைகளும், ஆபாச அனாச்சாரங்களும் எமது கலாச்சாரத்தையே கருவறுக்கத் தொடங்கியிருக்கும் சூழ்நிலைதான் என்ன?

சிறிலங்கா அரசின் தொடர்ச்சியான இராணுவ அடக்குமுறையின் நடுவில், இங்கே வாழ முடியாமல், தொழில் ஏதும் தேட முடியாமல், விரக்தியின் விளிம்பிற்கே தள்ளப்பட்ட நிலையில், வேறு வழியின்றி, வெளிநாடுகளுக்கு, விபரிக்க முடியாத துன்பங்களோடும், சட்ட விரோதமாக ஆட்கடத்தும் தரகர்கள் – முகவர்கள் கொண்ட ஏஜென்சி வல்லூறுகள் பலரின் மோசடிகளைத் தாங்கிக் கொண்டும், ஐரோப்பிய அமெரிக்க நாடொன்றுக்கு போய்ச் சேர்ந்து, அங்கே மாடாய் உழைத்து, குளிரில் உறைந்து எமது உடன்பிறப்புக்கள் அனுப்பிக் கொண்டிருக்கும் பணம், எங்கள் இளையோர்களில் பலரை வழி தவறச் செய்கின்றதா?

கல்வியே குடிசைக் கைத்தொழிலாக ஆகிவிட்ட நிலையில், தமது பிள்ளைகளை கல்வி நிலையங்களுக்கு இருச்சக்கர வாகனங்களில் ஏற்றுவதும் இறக்குவதும் ஆக, இயந்திரங்களாக மாறிவிட்ட பெற்றோர்களின் கவனம் காணாமல் போய்விட்ட நிலையில், ‘பேஸ்புக்’ சமாச்சாரங்களும், ‘வெப் சைட்’ விவகாரங்களும் சமூக ஊடகங்கள் என்ற பெயரில் எமது இளைய சமூகத்தையே, திசைமாறும் பறவைகளாக மாற்றிக் கொண்டிருக்கினறனவா?

படித்தவர்களும் பாங்கான பதவிகளில் உள்ளவர்களும், புலமையாளர்களும் தொழிற்துறை வல்லுனர்களும், தாமுண்டு – தம் தொழில் உண்டு என்ற சிந்தனைச் சிறைக்குள்ளே சிக்கிக் கொண்டு, சமூக நீரோட்டத்தில் இருந்து தொலைதூரம் போய்க் கொண்டிருக்கின்றார்களா?

இந்தக் கேள்விகளெல்லாம் ஏன், எதற்கு என்று எவரும் நினைக்கலாம்!

வீரசுதந்திரம் வேண்டி நின்ற இனம், கட்டுப்பாட்டோடும், கட்டுக்கோப்போடும், துன்ப துயரங்களை தூசு என மதித்து, உன்னத லட்சியத்துக்காக ஒன்றுபட்டு எழுந்து நின்ற தேசம், இன்று மெல்ல மெல்ல சாய்ந்து கொண்டிருக்கிறதே! அதை சகித்துகொள்ள முடியாமல் தான் இந்தச் சிந்தனைச் சிதறல்கள்!!

தலைவர்கள் என பெயர் படைத்தோருக்கு நாட்டில் என்ன நடக்கிறது என்பது பெரிதாகத் தெரியாது. அவர்களில் பலருக்கு கொஞ்சம் கூடத் தெரியாது. தேர்தல் வந்தால் தான் அவர்கள் தெருவுக்கே வருவார்கள்! பகிரங்க நிகழ்வுகளும் பத்திரிகைச் செய்திகளும், ஊடகப் பேட்டிகளும் உல்லாச கொண்டாட்டங்களுமாக அவர்களின் உலகம், உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் சுழன்று கொண்டிருக்கின்றது.

அதே நேரத்தில், உடல் உழைப்பை நம்பி வாழும் ஏழை எளிய மக்களுக்கு, தினசரி வாழ்க்கையே ஜீவ-மரணப் போராட்டம்! நடுத்தர மக்கள் ‘ஒரு மாதிரி’ சமாளித்துக் கொள்வதிலேயே நாட்களை நகர்த்திக் கொண்டிருக்கின்றார்கள்.

கோவில் திருவிழாக்களும் கும்பாபிஷேகங்களுமாய் எங்கள் ஆலயங்களில் ஆன்மீகம் ஆட்சி செய்கையில், அர்த்தமின்றி, லட்சக்கணக்கில் பணம் வீணாக கரைந்து கொண்டிருக்கின்றது.

மறுபுறத்தில், போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் – முதியோர்கள், சிறார்கள் உட்பட – உணவுக்கும் உடைக்கும், பாதுகாப்பான வாழ்விடத்திற்கும் நிரந்தரமான தொழிலுக்கும், கல்விக்கும் சுகாதாரத்திற்கும் தினசரி ஏங்கி நிற்கும் அவல நிலை நீண்டு செல்கிறது…

இன்னொரு புறத்தில், எமது மக்களுக்கு தெரிந்திராத விடயமாக அந்தக் காலத்தில் இருந்த கந்துவட்டித் தொழிற்துறை இன்று பரிச்சயமான விடயமாக நிலை கொண்டிருக்கின்றது.

இவ்வளவும் போதாது என்று, புனிதமான மதங்களின் பேரால், எமது மண்ணில் இங்கும் அங்குமாக முளைத்திருக்கும் நிறுவனங்கள், நலிவடைந்த நிலையிலுள்ள மக்களை, பணத் தூண்டில்களைப் போட்டு கவ்வி இழுக்கும் சங்கதிகள், சட்ட உரசல்களாக மாறி, நீதிமன்றங்கள் வரையில் போய் நிற்கின்றன…

இவற்றுக்கு மேலதிகமாக இலஞ்சம், ஊழல் மற்றும் காணிக் கபளீகர நடவடிக்கைகள் என்றெல்லாம் சட்டத்திற்கே சவால்கள் தொடர்ச்சியாக விடுக்கப்படுகின்றன.

இந்தச் சாக்கடைச் சங்கதிகளைப் பற்றி சற்றும் கவலைப்படாமல், இலக்கிய மேடைகளிலும் பட்டிமன்றங்களிலும், கவிதை அரங்குகளிலும் கலாச்சார விழாக்களிலும், கம்பனும் வள்ளுவனும், இளங்கோவும் பாரதியும் மீண்டும் மீண்டும் பிணச்சோதனை செய்யப்படுகின்றார்கள்!

**இப்போது கேள்வி ஒன்றே ஒன்று தான்!**
**நாம் எங்கே போய்க் கொண்டிருக்கின்றோம்?**

**ஆசிரியர்**

# 2009 இல் இந்தியா நடந்துகொண்ட விதத்தை!

## தமிழ்நாட்டு மக்கள் மன்னிக்கமாட்டார்கள்!!



2009 ம் ஆண்டு ஈழத்தமிழர்களிற்கு இழைக்கப்பட்ட அநீதியை ஒருபோதும் மறக்கமாட்டேன் என தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

2009 இல் இந்தியா நடந்துகொண்டவிதத்தை நானும் தமிழ்நாட்டின் தமிழர்களும் ஒருபோதும் மன்னிக்கமாட்டோம் என குறிப்பிட்டள்ள அவர் இந்தியா தலையிட்டு யுத்தத்தை தடுத்திருக்கலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

பிரிட்டனில் புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் உரையாற்றுகையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

2009 மே மாதம் பத்தாம் திகதி குஜராத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் இலங்கையில் எனது சகோதர சகோதரிகள் படுகொலை செய்யப்படும்போது இந்திய அரசாங்கம் என்ன செய்கின்றது என நரேந்திரமோடி பகிரங்கமாக கேள்வி எழுப்பினார் என அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழர்களிற்கு இந்திய பிரதமர் அரசியல் தீர்வொன்றை வழங்குவார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

2014 இல் பாஜக அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது முதல் அணுகுமுறை மாற்றமடைந்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ள அவர் தமிழ்நாட்டிற்கும் பலாலிக்கும் இடையிலான நேரடிவிமானசேவை காரைக்கால் காங்கேசன்துறை இடையிலான படகு சேவை மற்றும் மன்னார் தமிழ்நாட்டிற்கு இடையிலான படகுசேவை திட்டம் போன்றவற்றினால் மக்கள் மத்தியிலான தொடர்பு அதிகரிக்கப்படுகின்றது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு சென்ற மலையக மக்களை சந்தித்த முதல் இந்திய பிரதமர் நரேந்திரமோடி என்பதையும் அண்ணாமலை நினைவூட்டியுள்ளார்.

1987ம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் அடிப்படையில் 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்பதே இந்தியாவின் உறுதியான நிலைப்பாடு எனவும் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

ஈழத்தமிழர்கள் மலையகத்தமிழர்கள் பெருந்துன்பங்களை அனுபவித்துள்ளனர் இருசமூகத்தினரையும் சர்வதேச சக்திகள் தங்கள் சதுரங்கவிளையாட்டிற்காக பயன்படுத்தியுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

**தேசியம் பத்திரிகையின்**
**மின்னிதழை பெற இவ் வாட்ஸ் ஆப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்..!**
SCAN ME



# ஐ.எம்.எஃப்பைக் கையாள முடியாத தமிழர்கள் ?

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 53 வது கூட்டத்தொடர் கடந்த 19ஆம் திகதி ஆரம்பமாகியது. இக்கூட்டத்தொடரில் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை தொடர்பான வாய்மூல அறிக்கை வாசிக்கப்பட்டது.

கடந்த சில ஆண்டுகளாக மனித உரிமைகள் கூட்டத் தொடரை நோக்கிய தமிழ் மக்களின் கவனக்குவிப்பு ஒப்பீட்டளவில் குறைந்து விடுகின்றது. ஐரோப்பாவை மையமாகக் கொண்டு இயங்கும் தமிழர் அமைப்பு என்ற ஒரு அமைப்பு ஐ.நா விவகாரங்களில் தொடர்ச்சியாக செயற்பட்டு வருகின்றது.

## ஐ.நா இலங்கை இனப்பிரச்சினை

அதேசமயம் இம்முறை நாட்டிலிருந்து மனித உரிமைகள் கூட்டத்தொடருக்கு அரசியல்வாதிகள் யாரும் சென்றிருக்கவில்லை. அண்மை ஆண்டுகளாக மனித உரிமைகள் கூட்டத் தொடருக்குச் செல்லும் தமிழ் அரசியல்வாதிகள் மற்றும் செயற்பாட்டாளர்களின் எண்ணிக்கை குறையத் தொடங்கிவிட்டது.

இந்த விடயத்தில் தமிழ்த்தரப்பிடம் ஒருவித சோர்வு அல்லது ஊக்கமின்மை காணப்படுகின்றது. இதற்குக் காரணம் என்ன? இத்தனைக்கும் கடந்த ஆண்டிலிருந்து ஐ.நா இலங்கை இனப்பிரச்சினை தொடர்பில் ஒரு பொறிமுறையை உருவாக்கிச் சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரித்து வருகின்றது.

இந்தப் பொறிமுறை சிரியா போன்ற இடங்களுக்கு உருவாக்கப்பட்ட ஒரு பொறி முறையைப் போன்ற பலமான ஒன்று இல்லைத்தான். அது ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கு உட்பட்ட ஒன்றுதான். என்றாலும் தமிழர்களுக்கு சாதகமான ஒரு நகர்வு அது.

## நீதிநெறி சார்ந்த அறநெறி கையாளப்படல்

அதில் ஒன்றுமே இல்லை என்று நிராகரிக்க முடியாது. சரியோ பிழையோ, போதுமோ போதாதோ அது ஈழத் தமிழர்களுக்குச் சாதகமானது.

அதில் சேகரிக்கப்படும் சான்றுகளும் சாட்சிகளும் போர்க்குற்றம் தொடர்பான விசாரணைகளில் பெறுமதியானவை.

எனவே அப்பொறிமுறையை தமிழர்கள் நீண்ட கால நோக்கில் கையாள வேண்டும். ஆனால் அவ்வாறு கையாள்வதற்குரிய அரசியல் தரிசனமோ கட்டமைப்புகளோ வழி வரைபடங்களோ ஈழத்தமிழர்களிடம் உண்டா? ஐ.நாவைக் கையாள்வது என்பது அதன் எல்லாப் பரிமாணங்களிலும் வெளியுறவுக் கொள்கை சார்ந்த ஒரு விடயந்தான்.

> “தமிழ்த் தேசியப் பரப்பில் காணப்படும் கட்சிகளை அல்லது கட்சிக்கூட்டுக்களைத் தொகுத்துப் பார்க்கும் பொழுது இதில் ஒப்பீட்டளவில் இந்தியாவை விடவும் மேற்கே நோக்கி அதிகம் சாய்கின்ற கட்சிகள்தான் பலமாக இருக்கின்றன என்பது தெரிகிறது.”

நிச்சயமாக மனிதாபிமான அல்லது நீதிநெறி சார்ந்த அல்லது அறநெறி சார்ந்த ஒரு விடயம் அல்ல. எனவே ஐ.நாவும் உட்பட மேற்கு நாடுகளையும் பிராந்தியத்தில் இந்தியாவையும் சீனாவையும் கையாள்வதற்கு தேவையான ஒரு வெளியுறவுத் தரிசனம் அல்லது கொள்கை தமிழ்த்தரப்பிடம் உண்டா? அப்படி ஒரு வெளியுறவுக் கொள்கை இருந்தால்தான் அதற்குத் தேவையான வெளியுறவுக் கட்டமைப்பும் இருக்கும்.

## வெளியுறவுக் கொள்கை

ஆனால் கடந்த 14 ஆண்டுகளாக தமிழர்கள் ஐ.நாவை கட்டமைப்புச் சார்ந்து ஒரு மையத்தில் இருந்து அணுகவில்லை என்பதே உண்மை நிலையாகும்.

சிலஆண்டுகளுக்கு முன்பு யாழ்ப்பாணத்தில் நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில் சுமந்திரன் சொன்னார், வெளியுறவுக் கொள்கையை வெளிப்படையாக விவாதிக்க முடியாது என்று.

ஆனால் அவர் அப்படி சொன்னதன் பொருள் அவரிடம் ரகசியமான ஒரு வெளியுறவுக் கொள்கை உண்டு என்பதல்ல. அவரிடம் வெளியுறவுக் கொள்கையே இல்லை என்றுதான் பொருள். அப்பொழுதும் இல்லை இப்பொழுதும் இல்லை.

ஏனெனில் அப்படி ஒரு கொள்கை இருந்திருந்தால் அதைக் கையாள்வதற்கு தமிழரசுக் கட்சியிடம் ஒரு கட்டமைப்பு இருந்திருக்கும், ஆனால் அக்கட்சியிடம் கட்டமைப்புசார் அணுகுமுறை இல்லை. அதனால் தனி நபர் ஓட்டங்களே அதிகமாக உள்ளன.

## பூகோள அரசியல் அமைப்பு

தமிழரசுக் கட்சியிடம் மட்டுமல்ல பூகோள அரசியல் குறித்து அதிகமாகக் கதைக்கும் கஜேந்திரகுமாரிடமும் ஒரு வெளியுறவுக் கொள்கை உண்டா? கொள்கையிருந்தால் அதை நடைமுறைப்படுத்த ஒரு கட்டமைப்பு இருந்திருக்கும்.

தமிழ்த் தேசியப் பரப்பில் வெளியுறவு அணுகுமுறை அல்லது வெளிநாடுகளை நோக்கிய அணுகுமுறை என்று தொகுத்துப் பார்த்தால் கடந்த 14 ஆண்டுகளாக பின்வரும் போக்குகளை அவதானிக்க முடியும்.

சுமந்திரன் மற்றும் சம்பந்தரிடம் துலக்கமான ஒரு வெளியுறவுக் கொள்கை இல்லை. சுமந்திரன் அதிகம் மேற்கை நோக்கிச் சாயும் ஒருவராகப் பார்க்கப்படுகிறார். ஆனால் இந்தியாவைப் பகைப்பதில்லை. அதேசமயம் தமிழரசுக் கட்சிக்குள் தனிப்பட்ட உறுப்பினர்களிடம் இந்தியாவை நோக்கிய சாய்வு உண்டு.

அது வெளியுறவுக் கொள்கை சார்ந்த நிலைப்பாடு என்பதைவிடவும் கட்சிக்குள் தமது ஸ்தானத்தைப் பலப்படுத்துவதற்கான ஒரு நடவடிக்கை என்றே எடுத்துக் கொள்ள வேண்டும்.

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

கடந்த 14 ஆண்டு கால தமிழரசுக் கட்சியின் வெளியுறவு நிலைப்பாடுகளை தொகுத்துப் பார்த்தால் அக்கட்சியானது, அதிகம் மேற்கை நோக்கியே சாய்கின்றது, அதேசமயம், பலமான நாடுகளின் இழுவிசைகளுக்கிடையே பேர அரசியலை முன்னெடுக்கத் தவறியிருக்கிறது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைப் பொறுத்தவரை அதுவும் ஒரு மேற்கை நோக்கிய கட்சிதான். அது திட்டவட்டமாக இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாட்டை வெளிப்படுத்துகின்றது.

இந்தியாவின் புவிசார் அரசியல் நலன்களை எதிர்க்கப் போவதில்லை என்று அக்கட்சி அறிக்கைகளில் கூறிக் கொண்டாலும், நடைமுறையில் தனது எதிரிகளை இந்தியாவின் அடிவருடிகள் அல்லது கைக்கூலிகள் என்று கூறுவதன் மூலம் அது இந்தியாவை ஒரு எதிர்த்தரப்பாகவே உருவகப்படுத்துகின்றது.

இந்தியாவை ஒரு எதிர்த் தரப்பாகக் கருதினால் அதன் தர்க்கபூர்வ விளைவாக மேற்கைத் தான் கையாள வேண்டியிருக்கும்.

கடந்த 14 ஆண்டுகால அக்கட்சியின் நடவடிக்கைகளைத் தொகுத்துப் பார்த்தால், அது மேற்கை நோக்கிய ஒரு கட்சிதான்.

ஆனால் அக்கட்சிக்கும் தமிழரசுக் கட்சிக்கும் இடையில் உள்ள வேறுபாடு என்னவென்றால், முன்னணியியானது வெளிப்படையாக பலமான நாடுகளை நோக்கிச் சாய்வதில்லை என்பதுதான்.

## தமிழரசுக் கட்சி

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழரசுக் கட்சி ஆகிய இரண்டு கட்சிகளையும் தவிர்த்துப் பார்த்தால் விக்னேஸ்வரனின் கட்சி ஒப்பீட்டளவில் இந்தியாவை நோக்கிச் சாய்வதாகத் தெரிகிறது.

13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்குரிய ஒரு நடைமுறை வழி வரைபடத்தை விக்னேஸ்வரன் இப்பொழுது முன்வைக்கின்றார்.

அது இந்தியாவை நோக்கிய ஒரு சாய்வுதான். இவைதவிர ஏனைய கட்சிகள் அதாவது ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்குள் காணப்படும் கட்சிகளைத் தொகுத்து பார்த்தால், அவை இந்தியச் சாய்வு நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகள்தான்.

## இந்தியச் சாய்வுடைய ஒரு வெளியுறவு நிலைப்பாடு

அதில் உள்ள பெரும்பாலான கட்சிகள் முன்பு இந்தியாவோடு சேர்ந்து உழைத்தவை. இப்பொழுதும் இந்தியாவுக்கு விசுவாசமானவை. மேலும் அக்கூட்டுக்குள் காணப்படும்.

ஜனநாயக போராளிகள் கட்சியும் அண்மை காலங்களில் இந்தியாவை அதிகம் நெருங்கிச் செல்லும் ஒரு கட்சியாகத்தான் பார்க்கப்படுகிறது. அக்கூட்டமைப்புக்குள் இருப்பவை அநேகமாக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட அமைப்புகள்.

அதில் டெலோவையும் புளொட்டையும் தவிர ஏனைய கட்சிகளுக்கு குறிப்பிட்டுச் செல்லக்கூடிய மக்கள் ஆணை கிடையாது. எனவே தொகுத்துப் பார்த்தால் தமிழ் கூட்டமைப்புத்தான் ஒப்பீட்டளவில் வெளிப்படையாக இந்தியச் சாய்வுடைய ஒரு வெளியுறவு நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றது.

எனவே தமிழ்த் தேசிய பரப்பில் காணப்படும் கட்சிகளை அல்லது கட்சிக்கூட்டுக்களைத் தொகுத்துப் பார்க்கும் பொழுது இதில் ஒப்பீட்டளவில் இந்தியாவை விடவும் மேற்கே நோக்கி அதிகம் சாய்கின்ற கட்சிகள்தான் பலமாக இருக்கின்றன என்பது தெரிகிறது.

அவ்வாறு மேற்கை நோக்கிய வெளியுறவு நிலைப்பாட்டை கொண்டிருக்கின்றன என்றால் மேற்படி கட்சிகள் ஐநாவையும் கட்டாயம் கையாள வேண்டும்.

ஏனென்றால் மேற்கத்திய ராஜதந்திர பரப்புக்குள்தான் ஐநாவும் வருகின்றது. ஆனால் மேற்படி கட்சிகளிடம் ஐ.நாவைக் கையாள்வதற்குரிய சரியான வழிவரைபடம் ஏதும் இருக்கின்றதா? இங்கு ஒரு முக்கியமான விடயத்தை சுட்டிக் காட்ட வேண்டும்.

## மனித உரிமைகள் பேரவை

கடந்த 2021 ஆம் ஆண்டு ஐ.நா கூட்டத் தொடரை முன்னிட்டுத் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகள் மூன்றையும் இணைத்து ஒரு கடிதம் எழுதப்பட்டது. கடிதத்தில் ஒரு முக்கியமான விடயம் கேட்கப்பட்டது. பொறுப்புக்கூறலை மனித உரிமைகள் பேரவைக்கு வெளியே கொண்டு போக வேண்டும் என்பதே அது.

எனவே பொறுப்புக்கூறலை மனித உரிமைகள் பேரவைக்கு வெளியே எடுத்து ஐ.நா பொதுச்சபையானது அதனை சர்வதேச நீதிமன்றங்களை நோக்கிக் கொண்டுபோக வேண்டும். என்ற தொனிப்பட மேற்படி கடிதம் எழுதப்பட்டது. இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டு கிட்டத்தட்ட முப்பது மாதங்கள் ஆகின்றன.

ஆனால் அக்கோரிக்கையை நோக்கி மேற்படி கட்சிகள் எந்தளவுக்கு உழைத்திருக்கின்றன ? எந்த ஒரு கட்சியும் அவ்வாறு உழைக்கவில்லை என்றே தெரிகிறது.

அவ்வாறு உழைத்து இருந்திருந்தால் ஒரு பொருளாதார நெருக்கடியின்போது இலங்கை அரசாங்கத்தைப் பிணையெடுக்க முற்பட்ட மேற்கத்திய நாடுகள் இனப்பிரச்சனைக்கான தீர்வு தொடர்பில் அரசாங்கத்தின் மீது நிர்ப்பந்தங்களைப் பிரயோகித்து இருந்திருக்க வேண்டும்.

## புலம்பெயர்ந்த தமிழர் சமூகம்

ஆனால் அவ்வாறான நிர்பந்தங்கள் எவையும் பிரயோகிக்கப்படவில்லை என்பதைத்தான் நாட்டில் நடக்கும் சிங்கள பௌத்த மயமாக்கல் நமக்கு உணர்த்துகின்றது.

ஐ.எம்.எஃப், உலக வங்கி போன்றன பெருமளவுக்கு மேற்கத்திய ராஜதந்திர பரப்புக்குள் காணப்படும். உலகப் பொதுக்கட்டமைப்புகள்.

எனவே மேற்கைக் கையாள்வது என்ற நடைமுறையை கொண்டிருக்கும் தமிழ்க் கட்சிகள் ஐ.எம்.எஃப்பை வெற்றிகரமாகக் கையாண்டிருக்கின்றனவா? அல்லது பலமிக்க புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகம் அதை செய்திருக்கின்றதா? அவ்வாறு செய்திருந்திருந்தால் நிதி உதவியும் இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும்.

என்ற நிபந்தனையும் ஒன்றிலிருந்து மற்றது பிரிக்கப்பட முடியாதபடி பிணைக்கப்பட்டிருந்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு பிணைக்கப்படவில்லை. அது மட்டுமல்ல, ஐ.எம்.எஃப். பிரதிநிதிகள், தென்னிலங்கையிலுள்ள சிவில் சமூகங்களைச் சந்தித்திருப்பதாகத் தெரிகிறது.

## சிங்கள பௌத்தமயமாக்கல்


ஆனால் அவ்வாறு தமிழ்ச் சிவில் சமூகங்களை என் இதுவரை சந்திக்கவில்லை? எனவே பொருளாதார நெருக்கடியில் இருந்து ரணில் விக்ரமசிங்கவை காப்பாற்றுவதான மேற்கு நாடுகளின் நிலைப்பாடு எனப்படுவது, தமிழ்க் கட்சிகளின் மேற்கை நோக்கிய அணுகுமுறையின் இயலாமையைக் காட்டுகிறது.

ஐ.எம்.எஃப்பின் உதவிகள் கிடைக்கும் ஒரு காலகட்டத்திலேயே சிங்கள பௌத்தமயமாக்கல் தீவிரமாக முன்னெடுக்கப்படுகின்றமை என்பது அந்த இயலாமைக்குச் சான்று.

அரசாங்கம் ஒருபுறம் ஐ.நாவின் நிலைமாறு கால நீதிக்கான கட்டமைப்புகளில் ஒன்றாகிய உண்மை மற்றும் நீதிக்கான ஆணைக் குழுவை உருவாக்கப்போவதாக அறிவித்திருக்கிறது.

ஆனால் அதற்குச் சமாந்தரமாக சிங்கள பௌத்த மயமாக்கல் தீவிரமாக முன்னெடுக்கப்படுகின்றது. ஆயின், அரசாங்கம் பொறுப்புக்கூறலுக்கு அதாவது நிலைமாறு கால நீதிக்கு விசுவாசமாக இல்லை என்பது பொருள்.

எனினும் ஐ.எம்.எஃப்பும் மேற்குநாடுகளும் ரணில் விக்ரமசிங்கவுக்கு தொடர்ந்து உதவுகின்றன. என்றால், புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகமும் உட்பட தமிழ்த்தரப்பு மேற்கு நாடுகளை பொருத்தமான விதங்களில் கையாள்வதில் தோல்வி அடைந்துவிட்டது என்று தானே பொருள்?



நிலாந்தன்



# சூழலை பாதுகாத்துக்கொள்! அது உன்னை பாதுகாக்கும்!!

'சப்தமிட்டு நடக்காதீர்கள், இங்கு தான் என் அருமைத் தாயார் இளைப்பாறிக்கொண்டிருக்கிறார்". புகழ் பெற்ற கவிஞர் ஷெல்லி தனது தாயாரின் கல்லறையில் பொறித்த கவிதை.

மேற்குல மக்கள் இறந்தவர்களின் கல்லறைகளை எவ்வளவு அழகாவும் அமைதியாக வைத்திருக்கிறார்கள் என்பதை யாழ்.மாவட்டத்தில் உள்ள மயானங்களை தாண்டிச் செல்லும் போது எண்ணத்தில் நினைவில் வரும்.

சிறப்பு பெற்ற கவிஞர் கலீல் ஜிப்ரான் தன் கல்லறையில் எழுதப்பட்ட வேண்டிய வரிகளை தன் நூல் ஒன்றில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"என் கல்லறையில் இந்த வார்த்தைகளை எழுதி வையுங்கள் நானும் உங்களைப் போல் உயிரோடு தான் இருக்கின்றேன் . உங்கள் அருகிலேயே நிற்கின்றேன். கண்களை மூடி , சுற்றிலும் பாருங்கள் நான் உங்கள் முன் நிற்பதைக் காண்பீர்கள்"

இறந்தவர்களின் உடல்களை எரியூட்டும் அல்லது புதைக்கும் இடத்தை சுத்தமாகவும் அழகாகவும் அமைதியாகவும் வைத்திருக்க வேண்டும் என்பது ஒவ்வொருவரதும் தலையாய கடமையாகும் .

**'மரணம் வாழ்வில் நிதர்சனமானது எவரும் தவிக்க முடியாதது எல்லோரும் எதிர்கொள்ள வேண்டியது'**

மரணத்தின் பின் இறுதி சடங்குகள் உரிய முறையில் நடக்க வேண்டும் என்பதனையே ஒவ்வொரு மனித உயிரும் விரும்பும்.

இறுதியுத்தத்தில் முள்ளிவாய்கால் மண்ணில் இராணுவத்தால் கொல்லப்பட்ட உறவுகளின் உடல்களை இறுதி சடங்குகளை உரிய முறையில் செய்து எரியூட்டவோ புதைக்கவோ முடியவில்லை என்ற மன உளைச்சலில் பலர் இன்றளவும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

கொவிட்19 பெரும் தொற்றினால் இறந்தவர்களின் உடல்களை தகனம் செய்ய வேண்டும் என அரசாங்கம் முடிவு எடுத்தபோது இஸ்லாமிய மக்கள் தமது மார்க்கத்தை அவமதிப்பதாக கொதித்தெழுந்தார்கள்.

இறந்த தம் உறவுகளை புதைப்பதற்கு அனுமதிகோரி நீதிமன்றங்ககளை அணுகி மனுத்தாக்கல் செய்தனர். அத்தோடு நின்றுவிடாமல் அறவழிப் போராட்டங்களையும் முன்னெடுத்தனர். இறந்தவர்களின் உடல்களை உரிய மரியாதையோடு அடக்கம் செய்ய வேண்டும் என்பதனையே எல்லா மதங்களும் இனங்களும் விரும்புவார்கள்.

யாழ்ப்பாணம் சங்கானை கரைச்சி பொது மயானத்தை தாண்டிச் செல்லும் போது துர்நாற்றம் வீசுகின்றது. பிரதேச மக்கள் அன்றாட தமது கழிவுகளை கொட்டும் ஓர் இடமாக மாறிவிட்டது. பிளாஸ்ரிக் போத்தல்கள் பொலித்தீன்கள் உடைந்த கண்ணாடி போத்தல்கள் வெட்டப்பட்ட மரக்கிளைகள் என அத்தனையும் அதனை அண்டிய பகுதிகளில் காணக்கூடியதாக உள்ளது.

இறந்த வீட்டுப்பிராணிகளான நாய் பூனை போன்றவற்றையும் மயானத்திற்கு அருகில் வீசிவீட்டு செல்கின்றனர். மாடு கன்று ஈன்றபின் போடும் நஞ்சுக்கொடியையும் மயானத்திற்கு அருகில் உள்ள மரங்களில் கட்டி விடுகின்றனர்.மாடுகள் இறந்தாலும் மயானத்திலேயே புதைக்கின்றனர்.

கரைச்சி பொது மயானமானது சுடுகாடும் இடுகாடும் இணைந்த ஓர் இடமாகும். மத நல்லிணக்கம் கொண்ட இடமாக உள்ளது . கவியரசு கண்ணதாசனின் கவிவரிகளில் "சமரசம் உலாவும்" இடமே இதுதான்.

**சமரசம் உலாவும் இடமே**
**நம் வாழ்வில் காணா**
**சமரசம் உலாவும் இடமே**
**நம் வாழ்வில் காணா**
**சமரசம் உலாவும் இடமே**

**ஜாதியில் மேலோர் என்றும்**
**தாழ்ந்தவர் கீழோர் என்றும்**
**பேதமில்லாது**
**எல்லோரும் முடிவில் சேர்ந்திடும் காடு**
**எல்லோரும் முடிவில் சேர்ந்திடும் காடு**
**தொல்லையின்றியே தூங்கிடும் வீடு**
**தொல்லையின்றியே தூங்கிடும் வீடு**
**உலகினிலே இதுதான்**
**நம் வாழ்வில் காணா**
**சமரசம் உலாவும் இடமே**
**நம் வாழ்வில் காணா**
**சமரசம் உலாவும் இடமே**

**ஆண்டி எங்கே அரசனும் எங்கே**
**ஆண்டி எங்கே அரசனும் எங்கே**
**அறிஞன் எங்கே அசடனும் எங்கே**
**அறிஞன் எங்கே அசடனும் எங்கே**
**ஆவி போன பின் கூடுவார் இங்கே**
**ஆவி போன பின் கூடுவார் இங்கே**
**ஆகையினால் இதுதான்**
**நம் வாழ்வில் காணா**
**சமரசம் உலாவும் இடமே....**

சங்கானை கிராம சேவகர் பிரிவுகளில் ஜே-78, ஜே-79, ஜே-80 கிராம சேவர் பிரிவுகளும் ஜே- 81 இல் குறிப்பிட்ட சில மக்களும் வட்டு-கிழக்கை சேர்ந்த குறிப்பிட்ட சில குடும்பங்களுக்கும் உரிய மயானமாக கரைச்சி பொது மயானம் விளங்குகின்றது.

கரைச்சி பொது மயானத்திற்கு 500 மீற்றர் தூரத்தில் காரைநகரில் இருந்து இடம்பெயர்து அப்பகுதியில் முகாமில் இருந்த மக்கள் தற்போது காணிகளை விலை கொடுத்து வாங்கி வாழ்ந்து வருகின்றனர்.இக் காணிகள் தாழ்வான நிலப் பகுதிகளாக உள்ளன.

மயானத்திற்கு முன் பகுதி வயல் வெளியாக உள்ளது. மழை காலத்தில் அப்பகுதி மக்களால் கொட்டப்படும் கழிவுகள் மழைநீரோடு வயல்களை சென்றடைகின்றன. அவை அங்குள்ள கிணற்றுகளையும் அத்தோடு வயல் காணியையும் மாசடையச் செய்கின்றன. இதனால் பயிர்களும் பாதிப்படைகின்றன.

கரைச்சி மயானம் ஒரு ஒதுக்கு புறமாக உள்ளதால் பல சமூக சீர்கேடுகளும் இடம்பெறுகின்றன. வீடுகளில் உள்ள கழிவுகளை உரப்பைகளில் இட்டு வீட்டுக்கு வெளியில் ஒவ்வொரு வியாழக்கிழமையும் வைக்கும் படி பிரதேச சபை அறிவித்து கழிவு முகாமைத்துவத்தை பேணுகின்றது. ஆனால் கரைச்சி பகுதி மக்கள் பலர் மயானத்திற்கு அருகிலேயே கழிவுகளை கொட்டுகின்றனர்.

மயானத்திற்கு காவலாளி இல்லாதது ஒரு பெரும் சீரழிவுகளுக்கு வழிவகுக்கின்றது . மாலை இரவு வேளைகளில் மூட நம்பிக்கையான பில்லி, சூனியம், செய்வினை போன்ற துர் சடங்குகள் நடக்கின்றன. பூசாரி ஒருவர் தனது உதவியாளராக ஓர் இளைஞனை அழைத்து வந்து 'குட்டிச்சாந்தன்' கலைப்பதாக பெண்களை அழைத்து சடங்குகளை செய்கின்றார்.

அதேசமயம் மயான வீதியில் ஆட்கள் நடமாட்டம் குறைவாக உள்ளமையால் போதை பொருள் பாவனையாளர்களால் போதை பொருட்களை பாவிக்கும் ஓர் இடமாக உள்ளது. இது மட்டுமல்ல போதை பொருள் வியாரிகள் போதை பொருட்களை பரிமாற்றும் இடமாகவும் உள்ளதாக அங்கு வயலில் வேலை செய்பவர்கள் தாம் அவதானித்தாக கூறுகின்றார்கள்.

மயானத்தில் இருந்து 300 மீற்றர் தூரத்தில் சிறிலங்கா இராணுவத்தின் மினி முகாம் ஒன்று உள்ளமை குறிப்பிடத்தக்கது.

மயானத்திற்கு அருகில் உள்ளவர்கள் சுற்றுச் சூழல் பாதுகாப்பு தொடர்பான விழிபுணர்வு அற்றவர்களாகவே காணப்படுகின்றனர்.

இயற்கையை பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணப்பாடு அவர்களின் எண்ணங்களில் வெளிப்படவில்லை. மயானத்தில் உள்ள கிணறு புனரமைப்பு செய்ய வேண்டியதாக உள்ளதுடன் சுடலை வயிரவரின் சிறிய கோயிலும் சீர்செய்யப்படவேண்டியதாக உள்ளது.

சூழல் ஆரோக்கியமாக இருந்தால் மட்டுமே மனிதன் நீண்டகாலமாக நலத்துடன் வாழ முடியும் என்ற யதார்தம் புரியாதவர்களாக அப்பிரதேச மக்கள் உள்ளமை கவலையளிக்கிறது.

**துவாரகா கலைக்கண்ணன்**

# இலங்கை அரசாங்கம் மனிதாபிமானமற்ற குற்றவாளி! ஈழத்தமிழர் பேரவை வலியுறுத்து!

ஈழத் தமிழர் பேரவை ஐ.இரா.
COUNCIL OF EELAM TAMILS U.K.
CETUK
நிலம் பெயர்ந்தாலும் தாயக விடுதலையே எங்கள் மூச்சு...

இலங்கை மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றவாளி என்பதை வெளிப்படுத்துவதுடன், சித்திரவதைகளால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் வாழ்வு பெறுவதற்கு அவசியமான உதவிகளை வழங்க முன்வருமாறு ஐக்கிய நாடுகளின் கிளை அமைப்புகள் மற்றும் சித்திரவதைகளுக்கு எதிராகப் போராடும் சர்வதேச கட்டமைப்புகளிடம் பிரிட்டனின் ஈழத்தமிழர் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

சித்திரவதைகளால் பாதிக்கப்பட்டோருக்கான ஆதரவு தொடர்பான சர்வதேச தினத்தை முன்னிட்டு (ஜூன் 26) வெளியிட்டுள்ள அறிக்கையில் பிரிட்டனின் ஈழத்தமிழர் பேரவை வலியுறுத்தியுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

இம்முறை சித்திரவதைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கான ஆதரவு நாள் "சித்திரவதை மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றம்" என்ற தொனிப் பொருளில் நினைவு கூறப்படுகின்றது.

இருப்பினும் சித்திரவதைகளையே அரசியல் கொள்கையாக்கி, ஈழத்தமிழர்களை இன அழிப்புக்கு உள்ளாகி வரும் இலங்கை அரசாங்கம் சர்வதேச சட்டங்கள் மீதான அச்சமுமின்றி தினந்தோறும் மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்களில் ஈடுபட்டு வருகின்றது.

எனவே ஐக்கிய நாடுகள் சபையின் கிளை அமைப்புக்களும், சித்திரவதைகளுக்கு எதிராக போராடும் சர்வதேசக் கட்டமைப்புகளும் கூட்டிணைந்து இலங்கை மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றவாளி என்பதை வெளிப்படுத்த வேண்டும் என்றும், பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் மறுவாழ்வு பெறுவதற்கு உதவ முன் வர வேண்டும் என்றும் உலகெங்கிலும் உள்ள ஈழத் தமிழ் மக்கள் வலியுறுத்துகின்றனர்.

அதேவேளை உள்நாட்டுப் போரின் போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் உரியவாறான விசாரணைகளை முன்னெடுப்பதில் இலங்கை விருப்பமின்றி இருப்பதனால், பாதிக்கப்பட்ட தரப்பினர் வேறு இடங்களில் நீதி விசாரணையைக் கூற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

குறிப்பாக தற்போது உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் இலங்கை அரசாங்கம், நீதியை நிலைநாட்டுவதற்காக வன்றி நீதியை ஓரம் கட்டுவதற்காக முயற்சிக்கின்றது என்றுள்ளது.

# மன்னாரில் இயக்கர், நாகர்கள் வரலாற்று ஆய்வு காணொலி வவு.பல்கலையிடம் கையளிப்பு

மன்னார் மாவட்டத்தில் நாகர்கள், இயக்கர்கள் வாழ்ந்த இடங்கள் தொடர்பில் உருவாக்கப்பட்ட ஆய்வு ஆவணக் காணொலி இறுவட்டு, தமிழர் வரலாற்றை அடுத்த தலை முறையினருக்குக் கடத்தும் முகமாக வவுனியா பல்கலைக்கழகத் துணைவேந்தர் ரி.மங்களேஸ்வரனிடம் கையளிக்கப்பட்டது

இந்த நிகழ்வு வவுனியா பல்கலைக்கழகத்தில் திங்கட்கிழமை இடம்பெற்றது. மன்னார் ஊடகவியலாளர் எஸ்.ஜெகனின் ஆய்வில் சட்டத்தரணி செல்வராஜா டினேசன் அனுசரணையில் இந்த ஆவணக்காணொலி உருவாக்கப்பட்டுள்ளது.

சங்ககால இலக்கிய நூல்களிலிருந்தும் மற்றும் மன்னார் மாதோட்டப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட களஆய்விலிருந்தும் பெறப்பட்ட தகவல்களிலிருந்தும் காணொலி ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கைக்கு விஜயன் வருவதற்கு முன்னரே இங்கு வாழ்ந்த தமிழர்களின் மூத்த குடிகளாகவும் கோத்திர இனத்தவராகவும் வாழ்ந்த நாகர், இயக்கர், வேடுவர் போன்றோர் தமிழர்களே என்பது இதில் எடுத்துக்கூறப்படுகிறது.

நாகர் இனத்தவர்கள், மாந்தைப் பகுதியில் நாகதாழ்வு, பெரியநாவற்குளம், சிறுநாவற்குளம், நாகபடுவான் போன்ற இடங்களிலும்இயக்கர் இனத்தவர்கள் மன்னார் கட்டுக்கரையை அண்டிய பகுதிகளில் பண்ணை வெட்டுவான் , தப்பனைக்குளம், கோரமோட்டை, நெடுங்கண்டல், நெட்டாங்கண்டல், பரப்பாங்கண்டல் உட்படப் பல பகுதிகளிலும் வாழ்ந்தார்கள் என்பது ஆய்வுக் காணொலியில் தெளிவாக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இயக்கர்கள், நாகர்கள் என்பவர்கள் இலங்கையின் பல பாகங்களிலும் இந்தியாவின் நாகபட்டினம் போன்ற இடங்களிலும் வாழ்ந்துள்ளார்கள் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

# "மகாவம்சம்" மரபுரிமை ஆவணமாக யுனெஸ்கோ அறிவிப்பு!!

"மகாவம்சம்" நூலை உலக நினைவக மரபுரிமை ஆவணமாக யுனெஸ்கோ அமைப்பு அறிவித்துள்ளது.

இந்த நூல் கி.பி. 6 ஆம் நூற் றாண்டளவில், பாளி மொழியில் மகாநாம தேரர் எனும் பௌத்த பிக்குவால் தொகுக்கப்பட்டது.

இந்த நூல் இலங்கை வரலாற்றுத் தகவல்களை உள்ளடக்கி - பௌத்த முதன்மைப்படுத்தி தொகுக்கப்பட்ட பழமையான தொகுப்பு நூலாகும். அதன்படி யுனெஸ்கோவால் இந்த ஆண்டு புதிதாக அறிவிக்கப்பட்ட 64 உலக சர்வதேச ஆவண மரபுச் சின்னங்களில் " மகாவம்சம் " இணைக்கப்பட்டுள்ளது.




# சிறிலங்கா போர்க்குற்றங்களில் இஸ்ரேலின் பங்களிப்பு : ஐ.நா சபை மூலம் விசாரிக்க வேண்டுதல்:

இஸ்ரேலிய மனித உரிமை அமைப்புகளின் அமைதிக்காக போராடும் Yesh Gvul மற்றும் **Torat Tzedek (Israeli human rights organisations Combatant for Peace)** ஆகிய செயற்பாட்டாளர்கள் திரட்டிய சான்றுகள், இலங்கையில் நடந்த அட்டூழியங்களில் இஸ்ரேலிய ஆயுதங்களும் இராணுவ உபகரணங்களும் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்பதை தெளிவாக வெளிப்படுத்து உள்ளனர்.

**சிறிலங்காவின் போர்க் குற்றங்கள்:**

சிறிலங்காவின் போர்க் குற்றங்களுக்கு இஸ்ரேல் உடந்தையாக இருந்தது பற்றி விசாரிக்கப்பட வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை மூலம் இந்த மனித உரிமை அமைப்புகள் தற்போது கோரியுள்ளன.

சிறிலங்காவின் உள்நாட்டுப் போரின் போது, இஸ்ரேல் ஆயுதங்களை விற்று, இலங்கை இராணுவம் கடுமையான அட்டூழியங்களைச் செய்யும் போது அதற்கு ஆதரவாக இருந்தது என தற்போது பல குற்றச்சாட்டுக்களை ஐக்கிய நாடுகள் சபை மூலம் மனித உரிமை அமைப்புகள் தற்போது எழுப்பியுள்ளன.

சிறிலங்காவில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்து 14 ஆண்டுகளுக்கும் மேலாகிறது. 30 ஆண்டுகால மோதலால் அழிக்கப்பட்ட நாட்டின் சில பகுதிகளில் அமைதியின் சாயல் அரிதாக திரும்பியிருந்தாலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு இன்னும் நீதி வழங்கப்படவில்லை என்பதே உண்மை.

பல ஆண்டுகளாக, ஐக்கிய நாடுகள் சபையும் மனித உரிமை அமைப்புகளும் போரின் போது நடந்த போர்க்குற்றங்களை சிரத்தையுடன் ஆவணப்படுத்தியுள்ளன. அரசாங்கப் படைகளால் நடத்தப்பட்ட அட்டூழியங்கள் மீது ஐநாவின் கவனம் முக்கியமாக இருந்தது.

ஆனால் சிறிலங்கா அரசாங்கத்திற்கு ஆதரவான நாடுகள் சிவிலியன்களுக்கு எதிராக இழைத்த போர்க்குற்றங்களுக்கு உடந்தையாக இருந்திருக்கலாம் என்பது பற்றி அதிக கவனம் செலுத்தப்படவில்லை.

அதிக கவனம் செலுத்தப்படாத விடயங்களில், அதில் இஸ்ரேலின் போருக்கான உடந்தையும் ஒன்று. 2000களில், இஸ்ரேலின் இராணுவ தொழில்நுட்பத்தை கணிசமான அளவில் கொள்வனவு செய்து, ஆசியாவில் இஸ்ரேலின் மிக முக்கியமான வாடிக்கையாளர்களில் ஒன்றாக இலங்கை ஆனது.

அத்துடன் போரில் ஈடுபட்ட இலங்கைப் படையினருக்கும் இஸ்ரேலியர்கள் பல ஆண்டுகளாக பயிற்சி அளித்தனர்.

இந்தக் குற்றங்களில் இஸ்ரேலின் உடந்தையை அம்பலப்படுத்தவும், வழக்குத் தொடரவும் தாங்கள் விரும்புவதாக இஸ்ரேலிய மனித உரிமை அமைப்புகளின் அமைதிக்காக போராடும் Yesh Gvul மற்றும் Torat Tzedek ஆகிய செயற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

**ஆளில்லா UAV விமானங்கள் :**

இலங்கை வானில் இஸ்ரேலிய ஆளில்லா UAV விமானங்கள் பல பயன்படுத்தப்பட்டன.

> **“ சிறிலங்காவில் நடந்த போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களில் இஸ்ரேலிய ஆயுதங்களும் குறிப்பிடத்தக்க அல்ல பாரிய பங்கைக் கொண்டிருந்தன என மனித உரிமை அமைப்புகள் குற்றஞ் சாட்டியுள்ளன. ”**

1970 களின் நடுப்பகுதியில், வியட்நாம் போரில் அமெரிக்கா முன்னர் பயன்படுத்திய பழமையான கண்காணிப்பு ஆளில்லா வான் வழி வாகனங்களை (UAVs) இஸ்ரேல் வாங்கி அவற்றை உருவாக்கத் தொடங்கியது. 1980 களில், இஸ்ரேலிய இராணுவம் லெபனானில் நடந்த போரின் போது இந்த ஆளில்லாத விமானத்தை அட்டூழியமான முறையில் பயன்படுத்தியது.

பின்னர் பலஸ்தீன போராட்ட காலத்தில் காசா பகுதியில் அதன் தாக்குதல்களில் பல ஆளில்லா வான்வழி கலங்களை (UAV) பயன்படுத்தியது.

இந்த தாக்குதல் UAஏக்கள் முன்மாதிரிகளை உருவாக்கி மத்திய கிழக்கில் பொதுமக்கள் மற்றும் இராணுவ இலக்குகள் மீது மீண்டும் மீண்டும் இஸ்ரேலால் சோதிக்கப்பட்டது.

உலகம் முழுவதும் இஸ்ரேலின் மிகவும் விரும்பப்படும் தயாரிப்புகளில் ஒன்றாக இது மாறியது. 1990 கள் மற்றும் 2000 களில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் தீவிரமடைந்திருந்த நிலையில் இலங்கை அரசாங்கம் இஸ்ரேலிடம் இருந்து செய்த முக்கிய இராணுவக் கொள்வனவுகளில் இவையும் அடங்கும்.

இலங்கை இராணுவத்தின் சொந்த வார்த்தைகளில் கூறினால், இஸ்ரேலில் தயாரிக்கப்பட்ட UAV கள் "போரில் முக்கிய பங்கு வகித்தன" என மனித உரிமை அமைப்புகள் தற்போது குரல் எழுப்பியுள்ளன.

சிறிலங்கா அரசாங்கத்தின் மூத்த அதிகாரிகள் மற்றும் பாதுகாப்புப் படை அதிகாரிகள் பல முறை பேட்டிகள் மற்றும் அறிக்கைகளில், தாக்குதல்களுக்கு முன், "பொதுமக்களுக்கு பூஜ்ஜிய தீங்கு" என்ற கொள்கையின்படி, அப்பகுதியில் பொதுமக்கள் யாரும் காணப்படவில்லை என்பதை சரிபார்க்க, UAV படம் பிடிக்கப்பட்ட பயன்படுத்தப்பட்டன என்று கூறியுள்ளனர்.

**பொதுமக்களுக்கு கடுமையான பாதிப்பு:**

ஆனால், உண்மையில் பொதுமக்களுக்கு கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டதற்கான ஆதாரங்களை ஐ.நா.வும் , பல என மனித உரிமை அமைப்புகளும் தற்போது குற்றஞ்சாட்டியுள்ளன.

ஐ.நா மதிப்பீடுகளின்படி, போரின் கடைசி மாதங்களில் மட்டும், 40,000 முதல் 75,000 வரையிலான தமிழ் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். அவர்களில் பெரும்பாலோர் அரசாங்க பாதுகாப்புப் படையினரின் வேண்டுமென்றே துப்பாக்கிச் சூடு நடத்தியதால் கொல்லப்பட்டனர் என மனித உரிமை அமைப்புகளும் குற்றஞ்சாட்டியுள்ளன.

2015 ஐநா அறிக்கை ருயுஏ களின் பயன்பாட்டைக் கருத்தில் கொண்டு, பொதுமக்கள் உயிர் இழப்பு மற்றும் பொதுமக்களின் சொத்துக்களுக்கு சேதம் உண்டாகியது உண்மையே. சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தை மீறி அரசாங்கம் மற்றும் இராணுவத் தலைவர்களின் உத்தரவுப்படி இஸ்ரேலிய UAVக்கள் பொதுமக்களின் மரணங்களை பாரியளவில் உருவாக்கியது.

இதன் மூலம் இலங்கையில் நடந்த போர்க் குற்றங்கள் மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களில் மற்ற இஸ்ரேலிய ஆயுதங்களும் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டிருந்தன என்பதனை உறுதிப்படுத்தியது.

**தமிழர்க்கு எதிரான போர்:**

தமிழர்க்கு எதிரான போரில், இஸ்ரேலில் தயாரிக்கப்பட்ட முகசை போர் விமானங்கள், Dvora மற்றும் Shaldag போர்க்கப்பல்கள், தாக்குதல் பீரங்கி அமைப்புகள் மற்றும் Gabriel கடலில் இருந்து கடலுக்கு வீசும் ஏவுகணைகளையும் இலங்கை வாங்கியது.

அத்துடன் இஸ்ரேலிய கண்காணிப்பு UAV கள் இந்த கனரக ஆயுதங்களுக்கு வழிகாட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டன. அவை வேண்டுமென்றே பொதுமக்கள் மற்றும் மனிதாபிமான தளங்களை குண்டுவீசி அழித்தன. அத்துடன் கடுமையான செலவில் தமிழர்க்கு எதிரான போரை வெல்ல இந்த ஆயுதங்கள் உதவியதும் உண்மையே.

செஞ்சோலை கிராமத்தில் உள்ள சிறுமிகள் காப்பகத்தின் மீது இலங்கை விமானப்படை குண்டுவீசி 80 குழந்தைகளைக் கொன்றதுடன், பலரை காயப்படுத்தியது. ஆகஸ்ட் 14, 2006 இல் இஸ்ரேல் தயாரிப்பு முகசை விமானங்களை உக்ரேனிய விமானிகளே ஓட்டி வந்து இக் கொடூர சம்பவத்தை விளைவித்தனர்.

**செஞ்சோலை படுகொலை:**

இலங்கையில் உள்ள அரசுக்கு ஆயுதங்கள் மற்றும் பயிற்சிகளை மற்ற நாடுகளும் வழங்கின. அத்துடன் இஸ்ரேலிய இராணுவ ஆய்வாளர் ஷ்லோமி யாலின் கூற்றுப்படி, "வழங்கப்பட்ட ஆயுதங்களின் பெறுமதி, பல நூற்றுக்கணக்கான மில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டுகிறது." போருக்குப் பின்னர் இஸ்ரேலுக்கான தூதுவராக நியமிக்கப்பட்ட இலங்கையின் முன்னாள் தலைமை அதிகாரி டொனால்ட் பெரேராவும் இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

ஜுலை 21, 2010 அன்று இஸ்ரேலிய Ynet News இணையத்தளத்திற்கு அவர் அளித்த பேட்டியில், பல ஆண்டுகளாக இஸ்ரேல் தமிழர்க்கு எதிரான நமது போருக்கு தகவல் பரிமாற்றம் மற்றும் இராணுவ தொழில்நுட்பம் மற்றும் உபகரணங்களை வழங்கி உதவியது.

**இஸ்ரேலிலும் இலங்கையிலும் நீதி கேட்கும் தமிழர்:**

போரின் போது நடந்த அட்டூழியங்கள் குறித்து சர்வதேச அமைப்புகள் மற்றும் மனித உரிமை அமைப்புகளிடமிருந்து திரட்டப்பட்ட சான்றுகள் மற்றும் பல அறிக்கைகள் இருந்தபோதிலும், அவர்களுக்கு நேரடியாகப் பொறுப்பானவர்கள் அல்லது இஸ்ரேல் மற்றும் பிற நாடுகளில் இருந்து அவர்களுக்கு மறைமுகமாக உதவியவர்கள் மீது வழக்குத் இதுவரை தொடரப்படவில்லை.

ஐ.நா. இறுதிப் போரின் போது பொதுமக்களைப் பாதுகாக்கத் தவறிவிட்டது. இது 2011இல் ஊடகங்களுக்கு கசிந்த அதன் சொந்த உள்ளக அறிக்கையில் பிரதிபலித்தது. போருக்குப் பிறகு, ஐ.நா. பாதிக்கப்பட்ட பொதுமக்களை மீண்டும் தோல்வியுறச் செய்யும் வண்ணம், போர்க்குற்றங்கள் மற்றும் குற்றங்களுக்கான நீதியை அவர்களுக்கு வழங்கவில்லை. அவர்களுக்கு எதிராக நடந்த மனித குலத்திற்கு எதிராக நடந்த கொடுமைகளை விசாரிக்க இல்லை.

பொதுவாக மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் அதிக கவனம் செலுத்தும் மேற்கத்திய நாடுகள், தமது குறுகிய பொருளாதார, இராணுவ மற்றும் அரசியல் நலன்களுக்காக இலங்கை அரசாங்கத்துடன் வழக்கம் போல் வணிகத்தைத் தொடரவே விரும்புகின்றன.

இது உலகெங்கிலும் உள்ள சர்வாதிகாரிகள் மற்றும் அடக்குமுறை ஆட்சிகளுக்கு சிவிலியன்கள் மீதான தாக்குதல்கள் முழுமையான அளவில் செய்யப்படலாம் என்ற சமிக்ஞையை அனுப்பியுள்ளது.

சமீபத்திய ஆண்டுகளில், இஸ்ரேலிய மனித உரிமை ஆர்வலர்கள், இஸ்ரேலின் நிறவெறிக் கொள்கைகள், மனித நேயத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் பாலஸ்தீன மக்களுக்கு எதிரான போர்க்குற்றங்களைத் தடுக்கவும் முயல்கின்றனர்.

**இஸ்ரேலிய ஈடுபாடு :**

பிப்ரவரி 2002 மற்றும் மே இடையே இலங்கை உள்நாட்டுப் போரில் இஸ்ரேலிய ஈடுபாடு பற்றிய தகவல்களை சேகரித்த அவர்கள், 2009 சர்வதேச மற்றும் இஸ்ரேலிய தண்டனைச் சட்டத்தின் கீழ், இஸ்ரேலிய நிறுவனங்கள், அதிகாரிகள் மற்றும் தனியார் தனிநபர்கள் செய்த குற்றங்களில் ஈடுபட்டுள்ள குற்றவியல் விசாரணையை நியாயப்படுத்த போதுமான ஆதாரங்கள் உள்ளன என கூறியுள்ளனர்.

இலங்கையில் இடம்பெற்ற குற்றச் செயல்களில் ஈடுபட்ட இஸ்ரேலியர்களுக்கு எதிராக குற்றவியல் விசாரணையை ஆரம்பிக்குமாறு இஸ்ரேலின் அட்டர்னி ஜெனரலிடம் கோரிக்கையை முன்வைக்க அவர்கள் தீர்மானித்துள்ளனர். அதனை சர்வதேச அரங்கிலும் செய்ய முயல்கின்றனர்.

ஆயினும் சட்ட நடவடிக்கைக்கான வாய்ப்பு மிகக் குறைவு. ஒருவேளை இலங்கையில் நடந்த குற்றங்களை உலகம் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் விடலாம்.

காஸாவிலும் மேற்குக் கரையிலும் இஸ்ரேல் தொடர்ந்து குற்றங்களைச் செய்கிறதும் உலகம் அறிந்ததே.

**- நவீனன் -**






# முல்லைத்தீவில் பாரிய கருங்கல் அகழ்வு

## காடழிப்புடன் இடம்பெற்று வரும் கனியவளச்சுரண்டல்

இயற்கையை நீ அழித்தால் இயற்கையால் நீ அழிவாய் என்று இயற்கை உரக்கப் போதித்தாலும் நாங்கள் செவிமெடுப்பதாக இல்லை.

நாங்களே இயற்கையை ஆளப்பிறந்தவர்கள் என்ற மமதையில் இயற்கையைத் தொடர்ந்தும் அடிமைப்படுத்துகிறோம்.



சண்முகம் **தவசீலன்**

நிலத்திற்கு நீரைப்பருக்கும் வாய்களான குளங்களை இறுக்கி மூடியும், வெள்ள வாய்க்கால்களைக்கூட விட்டு வைக்காமல் கம்பள வீதிகளாக்கியும், சதுப்பு நிலங்களைக் குடியிருப்புகளாக்கியும் இயற்கையை எமக்கு ஏற்றவகையில் கட்டமைத்து வருகிறோம்.

தற்போதைய மனிதனை விட புத்திக்கூர்மையுள்ள மனிதன் பரிணாம வளர்ச்சியின் போது எதிர்காலத்தில் தோன்றினாலும் அவனாலுங்கூட இயற்கையை ஒருபோதும் வெல்ல முடியாது.

இயற்கையோடு இணைந்து இசைவுற வாழ்தலே இயற்கைப் பேரழிவுகளிலிருந்து நாங்கள் தப்புவதற்கான ஒரே வழிமுறையாகும்.

இதனை நன்கறிந்தவர்களாக தமிழீழ விடுதலைப்புலிகள் காலப்பகுதியில் இயற்கையை பாதுகாப்பதற்கான பல்வேறு வழிவகைகளை கையாண்டனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டுமன்றி அவர்கள் கட்டுப்பாட்டில் இருந்த இடங்களெங்கும் குறிப்பாக காடுகளை அழிப்பதை விடுத்து காடுகளை வளர்த்து வந்தனர்.

அதுமாத்திரமின்றி இயற்கைக்கு பாதகமான பல்வேறு விடயங்களுக்கான மாற்று வழிமுறைகளை கையாண்டனர்.

> **“ கருங்கல் அகழ்வினால் பாரியளவில் வனப்பகுதிகள் அழிக்கப்பட்டுள்ளன. மேலும், பாரியளவில் காடுகளும் அழிக்கப்படுகின்றன. அதேவேளை, குறிப்பிட்ட இடத்தில் உரிய நிபந்தனைகளை மீறி, வெடி மருந்துகள் பிரயோகிக்கப்படுவதால் ஏற்படும் வெடிப்புச் சம்பவங்களால் அருகில் உள்ள வீடுகளில் வசிக்கும் கர்ப்பிணிப் பெண்கள், சிறுவர்கள், வயோதிபர்கள் பாதிக்கப்படுகின்றனர். ”**

இவ்வாறான பின்னணியில் 2009 ஆண்டு யுத்தம் நிறைவடைந்து 14 ஆண்டுகளைத் கடந்துவிட்ட இன்றைய காலத்தில் இயற்கை வளங்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் பாரியளவில் அழிக்கப்பட்டுக் கொண்டிருப்பதை யாரும் கண்டுகொள்ளாமல் இருப்பது வேதனையான ஒரு விடயம்.

இன்றைய சூழலில் இயற்கையை அழிப்பதற்கு பலர் முண்டியடிக்கின்றனர் ஆனால் மாறாக இயக்கையை பாதுகாப்பதற்காக சட்டம் சந்தவர்களோ மக்களோ முன்வரவில்லை என்பதே இயற்கையை நேசிக்கின்ற பலரின் குற்றச்சாட்டாக காணப்படுகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தைப் பொறுத்த வரை கருங்கல் அகழ்வு, கிரவல் அகழ்வு, மணல் அகழ்வு, காடழிப்பு, என பல்வேறு வழிகளில் இயற்கை வளங்கள் அழிக்கப்படுகின்றன.

அபிவிருத்தி என்பது மனித வாழ்வுக்கு இன்றியமையாததாக இருப்பினும் இந்த அபிவிருத்தி பணிகளுக்காக முறைக்கேடாக இடம் பெறும் இயற்கை வள சுரண்டல்கள் மக்களை பாரிய இயற்கை அனர்த்தங்களுக்குள் கொண்டு செல்லும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

இவ்வாறாக முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஒட்டுசுட்டான் பகுதியில் கடந்த பல ஆண்டுகளாக வகை தொகையின்றி இடம்பெறும் கருங்கல் அகழ்வு நடவடிக்கை காரணமாக பாரிய சூழல் பிரச்சினைக்கு குறித்த பகுதி மக்கள் முகம் கொடுத்துள்ளனர்.

குறித்த பகுதியில் இடம்பெறுகின்ற இந்த கருங்கல் அகழ்வு நடவடிக்கையின் காரணமாக பாரியளவில் வனப்பகுதிகள் அழிக்கப்பட்டுள்ளன.

இந்த கருங்கல் அகழ்வு பணிகள் இடம்பெறுவதனால் பாரிய காடழிப்பு நடவடிக்கை இடம் பெறுகின்றது.

அதே வேளையில் குறிப்பிட்ட இடத்திலே உரிய நிபந்தனைகள் மீறப்பட்டு வெடி மருந்துகள் பாவிக்கப்படுகின்ற காரணங்களால் அருகில் உள்ள வீடுகளில் வெடிப்பு சம்பவங்கள் மற்றும் அருகில் உள்ள வீடுகளில் உள்ள கற்பவதிகள் சிறுவர்கள் வயோதிபர்கள் பாதிக்கப்படுகின்றமை உள்ளிட்ட பல்வேறு சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன.

இதனை விடவும் குறிப்பாக கருங்கல் அகழ்வு நடைபெறும் இடத்தினை அண்டிய பகுதிகள் விவசாய கிராமங்களாக இருக்கின்ற நிலையில் அதிகளவான ஆழத்தில் கிடங்குகள் தோண்டப்படுவதன் விளைவாக குறித்த பகுதிகளில் உள்ள கிணறுகளில் நீர் வற்றி போகின்ற நிலைமை காணப்படுகிறது.

இதனால் மக்கள் கடுமையான பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளனர் குறிப்பாக இந்த கருங்கல் அகழ்வு நடவடிக்கைகளோடு புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கங்கள் பணியகம், வளவள பாதுகாப்பு திணைக்களம், மத்திய சுற்றாடல் அதிகார சபை, பிரதேச செயலகம், காவல்துறை உள்ளிட்ட பல்வேறு திணைக்களங்கள் தொடர்புபட்டிருந்தாலும் ஒருவரை ஒருவர் சாட்டிக் கொண்டு இந்த கருங்கல் அகழ்வு நடவடிக்கைகளால் மக்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புகள் சூழல் சுற்றுச் சூழலுக்கு ஏற்படுகின்ற பாதிப்புகள் தொடர்பில் அக்கறை செலுத்தவில்லை என்றே குற்றம் சாட்டப்படுகிறது.

குறிப்பாக இந்த பகுதியில் தொடர்ச்சியாக கருங்கல் அகழ்வு நடவடிக்கையை மேற்கொள்ளும் இரண்டு கொம்பனிகள் அவர்களுடைய அனுமதி பத்திர விதிமுறைகளை மீறி பாரிய அளவில் குழிக்கள் தோண்டப்பட்டு இந்த கருங்கல் அகழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்திருந்தாலும் இன்று வரை இதற்கான உறுதியான எந்த விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இவற்றையும் கடந்து ஈழத் தமிழர் வரலாற்றுடன் தொடர்புடையதும், ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்துடன் தொடர்புடையதுமான வாவெட்டி மலை இதனால் ஆபத்தை எதிர்கொண்டுள்ளதாக பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

தொல்பொருள் வலயமாக காணப்படும் இந்த மலையில் பாரிய அளவில் கருங்கல் அகழ்வு இடம்பெற்றுச் செல்கின்ற போதும் தொல்பொருள் திணைக்களம் கூட இங்கே இருக்கின்ற தமிழர்களின் ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்ட குறித்த பிரதேசத்தை அண்மித்த பகுதியில் இடம்பெறுகின்ற கருங்கல் அகழ்வு நடவடிக்கைகள் தொல்பொருள் சான்றுகளுக்கும் பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடிய நிலைமை இருந்தும் அவர்கள் கூட இந்த விடயத்தில் கண்டும் காணாமல் இருக்கின்றார்கள்.

குறிப்பாக இந்த விடயம் தொடர்பிலே தொடர்ச்சியாக அபிவிருத்தி குழு கூட்டங்களிலே பேசப்பட்டு வந்தாலும் இதற்கு இன்று வரை தீர்வுகள் எட்டப்படவில்லை.

தொடர்ச்சியாக இங்கு இடம் பெறுகின்ற இந்த கருங்கல் அகழ்வு நடவடிக்கையானது எதிர்காலத்தில் குறித்த கருங்கல் அகழ்வு இடம் பெறுகின்ற இந்த இடத்தை அண்டிய மக்களுக்கு பாரிய ஒரு பிரச்சினையாக மாறக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது.

எனவே இந்த விடயங்களை உரியவர்கள் தலையிட்டு உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்பது அந்த மக்களினுடைய கோரிக்கையாக இருக்கின்றது.

## வடக்கின் கல்வி வளர்ச்சிக்கு கல்விச் சமூகமே பங்குதாரர்!

## யாழ். மேலதிக மாவட்டச் செயலர் சுட்டிக்காட்டு!

வடக்கின் கல்வி வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் பங்காற்றி சிறந்த மாணவர்களை உருவாக்குவதற்கு கல்விச் சமூகத்தின் பங்கு மேலும் அதிகரிக்கவேண்டும். அதற்கு துறை சார்ந்த அதிகாரிகள் முன்வரவேண்டும் என யாழ்.மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் ம.பிரதீபன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஆலொசகரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான சரா.புவனேஸ்வரனின் மணிவிழா நிகழ்வில் உரையாற்றுகையில்: கல்வியை நாம் விலைக்கு வாங்க முடியாது. தற்போதைய சூழ் நிலையில் சமூகத்தின் வளர்ச்சி கல்வித்துறையிலேயே தங்கியுள்ளது. பாடசாலைகள் தான் எமது கல்விச் செழுமையின் மைய சக்தியாக விளங்குகின்றன.

அரசிடம் எதிர்பார்த்தல் என்பதிலிருந்து விலகி சிந்திக்கவும் செயற்படவும் கல்விச் சமூகம் தயாராகுதல் வேண்டும்.

வடக்கின் வளர்ச்சி கல்வியூடாக வரும்போது அறிவுசார் பொருளாதார மையமாக எமது பிரதேசம் நிச்சயம் வளர்ச்சி பெறும்.

எனவே தெளிவான தொலைநோக்குக் கொண்டு வடக்கு மாகாண பாடசாலைகளினதும் பெறுபேறுகளினதும் வளர்ச்சியின் முகவர்களாக நாம் திகழ வேண்டும் - என்றார்.


### அன்பான வாசகர்களுக்கு..!

தேசியம் வாசகர்களுக்கு வணக்கம்.
எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.
அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம். பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



**அனுப்ப வேண்டிய முகவரி :**

No. 27, Kannathiddy Road, Jaffna. | Tel : 021 222 7557
E-mail : thesiyamnews@gmail.com | Whatsapp : +94 76 567 3339



# இந்துக்களின் பெயரால் ஒரு ஞானசாரதேரோ?

"இந்தியாவில் பாபர் மசூதிக்கு நடந்தது தையிட்டி விகாரைக்கும் நடக்கும்" என்று வடக்கில் செயற்பட்டுக்கொண்டிருக்கும் சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் கடந்த 29 ஆம் திகதி வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் தெரிவித்துள்ளதாக யாழ்ப்பாண ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும், "வடகிழக்கில் உள்ள சைவப்பகுதிகளில் பிற மதத்தவர் அடாத்தாக கட்டுகின்ற மதத்தலங்கள் அனைத்தும் பாபர் மசூதிகளே" என்றும் சச்சிதானந்தம் தெரிவித்ததாக அச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**- கடோற்கஜன் -**

பாபர் மசூதி என்பது, இராமபிரான் பிறந்த புனித பூமி என்று இந்துக்களால் போற்றப்படும் அயோத்தியில், அமைந்திருந்த புராதன இராமர் ஆலயத்தை, மொகலாய சாம்ராஜ்ஜியத்தின் ஸ்தாபகரான மன்னர் பாபர் இடித்து தரைமட்டமாக்கிவிட்டு, அதே இடத்தில் கட்டி எழுப்பிய மசூதி என்றே வரலாற்று ரீதியாக நம்பப்பட்டு வந்துள்ளது.

இந்த மசூதி தொடர்பாக இந்து முஸ்லிம் அமைப்புகளுக்கு இடையில் நீண்ட காலமாக இருந்து வந்த பிரச்சனை, நீதிமன்றம் வரையில் சென்று, இறுதியாக இந்திய உயர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரிக்கப்பட்டுக்கொண்டிருந்த போது, 1992 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 6ந் திகதி இராமர் ஆலயத்துக்கு அடிக்கல் நாட்டுவதற்கென, அங்கு திரண்டிருந்த பல்லாயிரக்கணக்கான இந்து அமைப்புக்களின் தொண்டர்களால் மசூதி தாக்கப்பட்டு உடைத்தெறியப்பட்டது.

இந்த அடாவடித்தனத்திற்கு, ஆலயம் அமைந்திருந்த உத்தரப்பிரதேச மாநிலத்தில் முதலமைச்சராக அப்போதிருந்த கல்யாண்சிங்கின் ஆதரவு இருந்தது என்பதோடு, பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் எல். கே அத்வானி உட்பட அக்கட்சியின் முன்னணித் தலைவர்கள் சிலரும், அதே இடத்தில் சமூகமளித்து இருந்தனர் என்பதும் ஆதார பூர்வமாக பின்னர் நிரூபிக்கப்பட்டிருந்தது.

பாபர் மசூதி உடைப்பை தொடர்ந்து வட இந்தியா முழுவதும் இந்து முஸ்லிம் கலவரங்கள் வெடித்தன. இப்பொழுது மும்பாய் என அழைக்கப்படும் பம்பாய் நகரம் உட்பட, பல்வேறு வட இந்திய நகரங்களில் இந்து முஸ்லிம் பொது மக்கள், பரஸ்பர மோதல்களில் ஈடுபட்ட இருதரப்பு வன்முறைக் கும்பல்களால் ஆயிரக்கணக்கில் படுகொலை செய்யப்பட்டனர். அந்தக் காயங்களின் வடுக்கள் இரு சமூகங்களின் மத்தியில் இப்பொழுதும் உள்ளன.

இப்பொழுது, யாழ்ப்பாணத்தில் நின்று கொண்டு மறவன்புலவு சச்சிதானந்தம், சிங்கள பௌத்த இனவாதியான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் உதிர்த்திருக்கும் வீராவேசக் கருத்துக்கள் நடைமுறைப்படுத்தப்பட்டால், அவை முழு நாட்டையுமே தீ வைத்துக் கொளுத்தக்கூடியவை!

1958,1977, 1983 என சுமார் 25 வருட காலத்துக்குள் அரசாங்க ஆதரவுடன் திட்டமிட்டு நிகழ்த்தப்பட்ட சிங்கள இனவெறித் தாக்குதல்களில் தென்னிலங்கையில் என்ன நடந்தது என்பது, அப்பொழுது ஒரு மாணவராக இருந்த சச்சிதானந்தத்துக்கு தெரியாமல் இருக்க முடியாது.

சமீபகாலம் வரையில், மிக நீண்ட வருடங்களாக இந்தியாவில் வாழ்ந்த சச்சிதானந்தம், அப்போது எல்லாம் தமிழ்த் தேசியத்தின் ஆதரவாளராக மதிக்கப்பட்டவர்.

நாடு திரும்பிய பிறகு, அவர் தரித்து நிற்கும், இந்து மடாதிபதி வேஷத்துக்கு கூட, இந்த வெறிப் பேச்சு பொருத்தமானது அல்ல.

இந்துத் தமிழர்கள் மத்தியில் இருந்து ஞானசாரதேரோவின் பாணியில் சச்சிதானந்தம் தன்னை நிரூவிக் கொள்ள முயற்சிக்கின்றாரா? என்ற கேள்வி, அரசியல் - சமூக வட்டாரங்களில் சமீப காலமாக எழுந்துள்ளது.

படித்த, பண்பான மற்றும் இன உணர்வு கொண்ட ஒரு பெரிய மனிதர், இப்படி நடந்து கொள்ளலாமா, என்ற கேள்வியும் கூடவே சேர்ந்து நிற்கின்றது. தையிட்டி விகாரை விவகாரத்தில் எதிர்ப்பு காட்டுவதற்கு பல பொருத்தமான வழிமுறைகள் உள்ளன. சச்சிதானந்தம் ஐயாவுக்கும் கட்டாயம் அவை தெரிந்திருக்கும்..



## முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மத்தியில்

# மனிதப்புதைகுழி

## பச்சை சீருடை, பெண்களின் உள்ளாடைகள், மனித எச்சங்கள் பலவும் மீட்பு.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குத்தொடுவாய் மத்தி பகுதியில் பெண் போராளிகளின் உடைகளுடன் மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளது.

தேசிய நீர்வளங்கல் வடிகாலமைப்பு சபையினர் நீர் இணைப்பினை மேற்கொள்வதற்காக கனரக இயந்திரம் கொண்டு நிலத்தினை தோண்டிய போது நிலத்தில் புதைக்கப்பட்டிருந்த மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இது தொடர்பில் கொக்கிளாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில் கொக்குளாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதன்போது பெண் போராளிகளின் சீருடை மற்றும் எலும்பு எச்சங்கள் என்பன அடையாளம் காணப்பட்டுள்ளன.

"இங்கு ஒன்றோ அல்லது இரண்டோ இல்லை, அதைவிடக் கூடுதலாகக் காண முடிந்தது" என்று வடக்கு மாகாண முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

இந்த புதை குழி காணப்பட்டவுடன் கொக்கிளாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தனக்குத் தகவல் தெரிவித்ததாகவும், உடனடியாக தான் அங்குச் சென்றதாகவும் துரைராசா ரவிகரன் கூறியுள்ளார்.

இது தொடர்பில் மேலும் அவர் கூறுகையில், மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டமை தொடர்பில் கொக்கிளாய் பொலிஸாரின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில், இது தொடர்பில் முல்லைத்தீவு நீதவானின் கவனத்திற்கும் கொண்டு செல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறுகின்றனர்.

### எலும்புக்கூடுகள்

மேலும், நீதிமன்ற உத்தரவை அடுத்து மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் பொலிஸ் தரப்பு கூறுகிறது. அந்த இடத்தை பார்வையிட நான் அனுமதிக்கப்பட்டேன். அங்கு உடைகளின் சில பகுதிகளும், எலும்புக்கூடுகளும் காணப்பட்டன.

உடைகளில் பெண்களின் ஆடைகளும் இருந்தன. அவற்றைக் காணும்போது அவை விடுதலைப் புலிகளுடையதாக இருக்கக் கூடும் என எனக்குத் தோன்றுகிறது.

2-3 மீட்டர் அளவிலான பகுதியில் அந்த உடல் எச்சங்கள் காணப்பட்டன. அந்த எலும்புக்கூடுகள் ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கி வைக்கப்பட்டமை போலத் தெரிகிறது.

இந்த மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடம் முல்லைத்தீவிலிருந்து சுமார் 25 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. எனினும் இந்த இடம் 'மாவீரர் துயிலும் இல்லம் இல்லை' என்பதை உறுதியாகக் கூற முடியும்.

### ஒருவரைக் கூட கண்டுபிடிக்கவில்லை

இந்த பகுதியிலிருந்த மக்கள் 1984ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் வாரம் அங்கிருந்து வெளியேறினர். அவர்கள் 2011ஆம் ஆண்டே மீள் குடியமர்த்தப்பட்டனர். மேலதிகமாக தோண்டப்படும் போதும் கூடுதல் உடல் எச்சங்கள் கிடைக்கலாம்.

மிகவும் கொடூரமாக நடைபெற்ற உள்நாட்டு யுததம் 2009ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதி இரத்தக்களரியுடன் முடிவடைந்த நிலையில், ஆயிரக்கணக்கான தமிழர்கள் அரச படையினரிடம் சரணடைந்தனர், அல்லது கையளிக்கப்பட்டனர் அல்லது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டனர்.

அவர்களைக் கண்டுபிடிக்க ஒரு அலுவலகம் 2016ஆம் ஆண்டு நாடாளுமன்ற தீர்மானம் ஒன்றின் மூலம் அமைக்கப்பட்டாலும், காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் அந்த அலுவலகம் இதுவரை அவ்வகையில் காணாமல் போன ஒருவரைக் கூட கண்டுபிடிக்கவில்லை.

அந்த அலுவலகமும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் பிரதி ஆணையாளரின் கடும் விமர்சனத்திற்குள்ளானது.

### போர்க் குற்றங்கள்

ஜூன் மாதம் 21ஆம் திகதி ஜெனீவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கையில் நிலவும் மனித உரிமைகள் தொடர்பான நிலை குறித்த தனது வாய்மொழியான அறிக்கையில் பிரதி ஆணையாளர் காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தைக் குறை கூறியிருந்தார்.

இதேவேளை பிரான்ஸ் 24 தொலைக்காட்சிக்கு நேர்காணல் ஒன்றை அளித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இலங்கையில் தென்னாபிரிக்கா போன்று உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஒன்று அமைக்கப்படுவதாகவும், போர்க் குற்றங்கள் தொடர்பான அனைத்து குற்றச்சாட்டுகளையும் அந்த அமைப்பு விசாரிக்கும் எனவும் தெரிவித்தார். அந்த ஆணைக்குழுவில் சர்வதேச மேற்பார்வையாளர்களும் உள்ளடங்குவார்கள் ரணில் கூறினார்.

ஆனால் மனித உரிமை செயற்பாட்டாளர்களோ, விடுதலைப் புலிகளுடனான இறுதிக்கட்ட யுத்தம் மற்றும் கடந்த 1980களில் சிங்கள இளைஞர்களின் எழுச்சியை ஒடுக்கியபோது இடம்பெற்ற பாரிய குற்றங்கள் தொடர்பிலான குற்றச்சாட்டுகள் மீதான விசாரணைகளை மூடி மறைக்கவே இந்த ஆணைக்குழு அமைக்கப்படுகிறது என அஞ்சுகின்றனர்.

இப்போது கொக்குத்தொடுவாயில் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலையில், இது தமது உறவுகளைத் தேடுபவர்களின் அச்சத்தையும் கவலையையும் மேலோங்கச் செய்துள்ளது.

கடந்த 2,300 நாட்களுக்கு மேலாகப் பெண்கள் தலைமையிலான அமைதி வழி போராட்டம் தமது சொந்தங்களைத் தேடி தொடர்ச்சியாக நடைபெறுகிறது.

இவ்வாறு மனித எச்சங்களைத் தென்படுவதான செய்தி பரவியதும் உறவுகளைத் தேடி அலையும் உறவினர்களிடையே பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது என குறிப்பிட்டுள்ளார்.



– ஐங்கரன் விக்கினேஸ்வரா–

## 'வாக்னர்'ஆயுத குழு சதிப்புரட்சியால்

# ரஷ்யாவில் புட்டின் ஆட்சி கவிழுமா ?

உலகம் முழுவதும் ஒரே ஒரு விஷயம் கடந்த சனிக்கிழமை காலை முதல் பரபரப்பான பேசுபொருளாக ஊடகங்களில், குறிப்பாக மேற்குலக ஊடகங்களில் அமைந்தது.

உண்மையில் இன்றைய ஊடகங்களில் அமையும் முக்கிய விடயம் ரஷ்யா தான். ஏற்கெனவே உக்ரைன் மீதான தாக்குதலின் காரணமாக ஒன்றரை ஆண்டுகளாக செய்திகளில் இருந்து கொண்டுதானே இருக்கிறது என எண்ணலாம். ரஷ்யா ஆம், இன்னமும் நெருக்கடியில்தான் இருக்கிறது.

மேற்குலக எண்ணத்தின் படி எப்படி முன்பு எப்படி சேட்டடதோ, அதே பாணியில் இப்போது ரஷ்யாவை சிதைக்கும் திட்டத்தில் மேற்குலக ஊடகங்கள் முனைப்பாக உள்ளன.

**ரஷ்யாவில ஆட்சி கவிழ்ப்பு வரலாறு:**

சோவியத் சிதைவின் பின்னர் இரண்டு முறை ஆட்சி கவிழ்ப்பை சந்தித்தது ரஷ்யா. ஆயினும் தற்போதய பிணக்குகள் பெலாரஸ் அதிபர் அலெக்சாண்டர் லுகாஷென்கோ உடன் ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட்டுள்ளதாக கூறியதைத் தொடர்ந்து, உயிரிழப்புகளைத் தவிர்ப்பதற்காக தனது படைகள் வெளியேறுவதாக வாக்னர் குழு தலைவர் தெரிவித்தார். இதனால் ஆயுத கிளர்ச்சி முடிவுக்கு வரவிருக்கிறது. வந்தும் விட்டதாக மாஸ்கோ தகவல்கள் கூறுகின்றன.

1991-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் சோவியத் ரஷியா உடைவதற்கு முன், கம்யூனிஸ்ட் கட்சி, சோவியத் ரஷியா உருவாவதற்கு முக்கிய பங்கு வகித்த 15 குடியரசுகளுக்கு சுயாட்சி அதிகாரம் வழங்கும் அதிகார ஒப்பந்தத்தை தடுத்து அதிகாரத்தை கைப்பற்ற நினைத்த சதி முறியடிக்கப்பட்டது.

அதன்பின் இரண்டு வருடங்கள் கழித்து 1993-ம் ஆண்டு செப்டம்பர் 21-ந்தேதி முதல் அக்டோபர் 4-ந்தேதி வரை பாராளுமன்ற கிளர்ச்சி ஒன்றும் ஏற்பட்டது.

**மேற்கத்திய ஊடக பிரச்சாரம்:**

ரஷ்ய விரோதப்போக்கு மேற்கத்திய ஊடக மனோபாவங்களில் ஊறி அது பரவி முழுமையாய் ஊறிப்போயுள்ளது. அதற்கு நேர் மாறாக அமெரிக்கா ஏதோ உலகிற்கு விடுதலை வாங்கித்தர வந்த மீட்பர்கள் போலவும் பல மேற்குலக ஊடகங்களும் தொடர்ந்து பல ஆண்டுகளாக பிரச்சாரம் செய்து வருவதையும் பார்க்கிறோம்.

கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் தொடங்கிய போர் இன்றும் நீடித்துவருகிறது. இந்தப் போரில் ரஷ்யா தொடர்ந்து மெதுவாக முன்னேறி வருவதாகச் சொல்லப்படுகிறது. இந்த நிலையில், தங்களைத் தனியார் ராணுவம் என அழைத்துக்கொள்ளும் 'வாக்னர் குழு' ரஷ்யாவுக்கு தலைவலியாக தற்போது மாறியிருக்கிறது என பல தகவல்கள் வெளிவந்துள்ளன.

இந்த வாக்னர் குழு கூலிப்படையாகவே மேற்குலக ஊடகங்களில் அறியப்படுகிறது. தற்போது ரஷ்யாவிற்கு மேலும் ஒரு நெருக்கடி கொடுத்து மீண்டும் புதிய கோணத்தில் பேசுபொருளாக்கியுள்ளது இந்த வாக்னர்ஆயுதக் குழு.

**வாக்னர் ஆயுதக் குழு பின்புலம்:**

உக்ரைன், நோட்டா அமைப்புடன் இணைவது ரஷ்யாவுக்கு அச்சுறுத்தல் என ரஷ்யா எச்சரித்தும், உக்ரைன் நோட்டாவுடன் இணைவதில் உறுதியாக இருந்தது. இதனால், ரஷ்யா உக்ரைனுக்கு எதிரான போரைத் தொடங்கியது.

இப்போரில் வாக்னர் ஆயுதக் குழு உக்ரைனின் கிழக்குப் பகுதியில் ராணுவத் தாக்குதலின்போது பயன்படுத்திக் கொள்ளப்பட்டது. குறிப்பாக, கிழக்கு உக்ரைனின் பக்முத் பகுதி கைப்பற்றப்பட்டதில் வாக்னர் ஆயுதக் குழுவின் செயல்பாடுகளுக்கு அதிபர் புட்டினே பாராட்டுகளைத் தெரிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ரஷ்ய அதிபர் புட்டினுக்கு புதிய நெருக்கடியாக வலம் வரும் வாக்னர் ஆயுதக் குழுவின் ஏன் இன்றைய நெருக்கடிகளுக்கு தள்ளப்பட்டதன் பின்புலம் என்ன என்பதை இலகுவாக கணிக்க முடியாது.

தற்போது தமது 25,000 வீரர்கள் இறப்பதற்குத் தயாராக இருக்கிறோம் என ரஷ்யாவுக்குச் சவால்விடுவதாக வாக்னர் குழு பற்றி ஐரொப்பிய ஊடகங்களில் பரவலான தகவல்கள் வெளிவருகின்றன.

**யாரிந்த யெவ்ஜெனி பிரிகோஸின்:**

இந்தக் குழு புட்டினின் தனிப்பட்ட ராணுவம் என்றும் கூட விமர்சனத்துக்குள்ளானது. உக்ரைன்-ரஷ்யப் போரில் ரஷ்யாவுக்காக வாக்னர் குழு சுமார் 30,000 பேரை பலி கொடுத்திருப்பதாகக் கூறப்படுகிறது. உக்ரைனின் பெரும்பகுதிகளை வாக்னர் குழுதான் கைப்பற்றி ரஷ்யாவிடம் ஒப்படைத்ததாகவும் தகவல்கள் முன்பு வெளியாகின.

வாக்னர் ஆயுதக் குழு என்பது ரஷ்யாவில் இயங்கிவரும் தனியார் ராணுவ ஒப்பந்த அமைப்பாகும். இது ஒருவித ஒப்பந்த படை என்றும் கூறலாம். ஏனெனில், ரஷ்யா மட்டுமல்லாது லிபியா, மாலி, சிரியா எனப் பல பகுதிகளிலும் உள்நாட்டுப் போரில் ஒப்பந்தத்தின் அடிப்படையில் அரசாங்கத்துக்கு ஆதரவாக இந்தக் குழுவினர் இயங்குகின்றனர்.

ஆனால், உலகம் முழுவதும் இந்தக் குழு சட்டத்துக்கு அப்பாற்பட்டே செயல்படுகிறது என மற்றய நாடுகள் தெரிவிக்கின்றன. ரஷ்யாவிலும் தனியார் ராணுவ ஒப்பந்தக்காரர்கள் சட்டபூர்வமாக தடை செய்யப்பட்டுள்ளனர். ஆனால், மறைமுகமாக அதிபர் புட்டினின் ஆதரவோடு, ராணுவத்தின் சம்மதத்தோடு தேவைப்படும் போது இந்தக் குழு இயக்கிக் கொள்ளப்படுகிறது என்பது வெளிப்படை.

முன்னாள் ரஷ்ய அதிகாரி டிமிட்ரி உக்டின் மற்றும் யெவ்ஜெனி பிரிகோஸின் (Yevgeny Prigozhin) என்ற புட்டினின் முன்னாள் தலைமை நிபுணரும் இணைந்து 2014-ல் இந்தப் படையை உருவாக்கினர். ஒரு மூர்க்கத்தனமான ஆயுதக் குழு என்றும், பக்முத்தில் வாக்னர் குழுவை இறக்கி தங்கள் படைகளுக்கு பெரும் சேதத்தை ரஷ்யா ஏற்படுத்தியதாக உக்ரைன் குற்றஞ்சாட்டி இருந்தது.

இவ்வாறாக இவர்களின் படைகள் உக்ரைன் மீதான தாக்குதல்களுக்கு பயன்படுத்தப்பட்டது. இப்போது நடக்கும் போர் தொடங்குவதற்கு முன்னரே 2014 தொட்டு உக்ரைனில் அவ்வப்போது சிறு தாக்குதல்களை இவர்கள் நடத்தினர். குறிப்பாக, கிரிமியாவை ரஷ்யாவுடன் இணைக்கும் போரில் 'தி வாக்னர்' ஆயுதக் குழு பெரும் பங்காற்றியது.

2015-ல் தொடங்கி இந்த ஆயுதக் குழு சிரியா, லிபியா, ஆப்பிரிக்கா, மத்திய கிழக்கு நாடுகளில் உள்நாட்டுக் கிளர்ச்சிகளில் அரசுக்கு ஆதரவாகப் பணியாற்றியுள்ளது. அதேபோல் சிரியாவின் தங்கச் சுரங்கங்களைப் பாதுகாக்கும் பணியிலும் ஈடுபட்டுள்ளது என்பது அறிந்ததே.

**மாஸ்கோவில் சதிப்புரட்சி சாத்தியமா ?**

மாஸ்கோவை விட்டு தனி விமானத்தில் அதிபர் புட்டின் வெளியேறினார் என்றும், ரஷ்ய ராணுவத்துடன் மோதத் துணிந்துள்ள வாக்னர் படையினர் மாஸ்கோ நோக்கி அணிவகுப்பதால் உள்நாட்டுப் போர் வெடிக்குமோ என்று அந்நாட்டு மக்கள் உச்சக்கட்ட பதற்றத்தில் இருக்கிறதாக அமெரிக்க, மேற்கு ஐரொப்பிய ஊடகங்கள் பரவலாக பிரச்சாரப் பாணியில் செய்திகளை வெளியிடுகின்றனர்.

> **உக்ரேனிய போரின் திருப்பு முனையாக உள்ளக சதி மூலம் அதிபர் புட்டினை வீழத்த மேற்குலகும் - அமெரிக்காவும் முயல்கின்றன. இதற்கு ஒத்து ஊதும் வண்ணம் மேற்கத்தய ஊடகங்கள் பல கற்பனைக் கதைகளை பரப்புவது சகஜம். மாஸ்கோவில் சதிப்புரட்சி சாத்தியமற்றதாகவும், ரஷ்ய அதிபர் புட்டினுக்கு ஏற்பட்ட நெருக்கடி தற்காலிகமானதாகவே தென்படுவதாகமாஸ்கோ ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.**

அத்துடன் ரஷ்ய அதிபர் புட்டின் சிறப்பு விமானத்தில் தலைநகர் மாஸ்கோவை விட்டு வெளியேறிவிட்டதாக சமூக வலைதளங்களில் பலரும் பதிவிட்டு வருகின்றனர். ரஷ்யாவில் அதிபர் புட்டினுக்கான சிறப்பு விமானமான Il-96-300PU விமானம் மாஸ்கோவில் இருந்து, அங்குள்ள நேரப்படி பிற்பகல் 2.16 மணியளவில் புறப்பட்டு வடமேற்குத் திசையில் சென்றுவிட்டதாக விமானங்களின் பாதையை பின்தொடரும் குடபைாவசுயனயச சேவை தரவுகளை சுட்டிக்காட்டி சிலர் பதிவிட்டுள்ளனர். இவை எல்லாம் சோடிக்கப்பட்ட செய்திகள் என மாஸ்கோ தகவல்கள் தெரிவிக்கின்றன.

மாஸ்கோவுக்கு வடமேற்கே உள்ள த்வெர் (Tver) நகருக்கு அருகே, புட்டின் பயணித்த சிறப்பு விமானம் அந்த கண்காணிப்பு கட்டமைப்பில் இருந்து மறைந்துவிட்டதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஆனால், அந்த சிறப்பு விமானத்தில் புதின் இருந்தாரா என்பதை உறுதிப்படுத்த எந்த ஆதாரமும் இல்லை.

அத்துடன் புட்டின் தலைநகர் மாஸ்கோவில் நிரந்தரமாக வசிப்பதில்லை, மாஸ்கோவுக்கு வடமேற்கே அமைந்துள்ள வால்டாய் ஏரியில் உள்ள தனது பரந்து விரிந்த இல்லத்தில் அதிக நேரத்தை செலவிடுவார் என்பதை உறுதிப்படுத்த முடியும்.

**புட்டினுக்கு எதிராக சதியா?**

முதுகில் குத்தும் செயல் என்று புட்டின் எச்சரிக்கை விடுத்துள்ளார். ரஷ்யாவின் ராணுவத் தலைமைக்கு எதிராக வாக்னர் குழு போர்க்கொடி தூக்கிய பிறகு முதன் முறையாக ரஷ்ய அதிபர் புட்டின் பத்திரிகையாளர்களை சந்தித்துள்ளார்.

ரஷ்ய மக்களுக்கு அவர் ஆற்றிய உரையில், அனைத்து படைகளும் ஒருங்கிணைந்து இருக்க கேட்டுக் கொண்டுள்ளார். நடந்த நிகழ்வுகள் "ஒரு துரோகம்" என்றும் ரஷ்ய மக்களை முதுகில் குத்தும் செயல் என்றும் அவர் சாடியுள்ளார். இது முதுகில் குத்தும் செயல். இந்த மாதிரியான அச்சுறுத்தல்களில் இருந்து தேசத்தைக் காப்பதற்கான எங்களது நடவடிக்கை தீவிரமானதாக இருக்கும். துரோகப் பாதையில் இறங்கி தீவிரவாதத்தை கையில் எடுத்தவர்கள், நிச்சயம் தண்டனையை அனுபவிப்பார்கள். சட்டத்திற்கும் நாட்டு மக்களுக்கும் அவர்கள் பதில் சொல்வார்கள் என்று அவர் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

ரஷ்யாவை அச்சுறுத்தும் இந்த மோசமான சூழலில் ரஷ்ய அரசு தரப்போ, வாக்னர் கூலிப் படை தலைவர் யெவ்ஜெனி பிரிகோஸினோ தங்களது நிலைப்பாட்டில் இருந்து பின்வாங்க தயாராக இருப்பதாக தற்போது தெரியவில்லை.

**புதினுக்கு நேரடி சவால் பிரிகோஸின்?**

புட்டினின் தொலைக்காட்சி உரைக்கு பதிலளித்துள்ள வாக்னர் தலைவர் யெவ்ஜெனி பிரிகோஸின் தனது நிலைப்பாட்டில் முதலில் உறுதி காட்டினார். தற்போது பெலரூஸ் நாட்டு நடுநிலமையுடன் தற்போதய சிக்கல்களை பேசித்தீர்க்க முடிவெடுத்து உள்ளார.

ரஷ்ய அதிபர் புட்டினுக்கு எதிராக முறையாக நேரடியாக பிரிகோஸின் விடுக்கும் சவால் இது என்று நம்பப்படுகிறது. மிகவும் நெருக்கமான, அவருக்கு விசுவாசமான சகாவாக வலம் வந்த பிரிகோஸின், ரஷ்ய அதிபர் மாளிகையான கிரெம்ளின் சமையல் ஒப்பந்தங்களை பெற்றதன் மூலம் "புதினின் சமையல்காரர்" என்று வர்ணிக்கப்பட்டவர்.

இந்நிலையில், அதிபர் புட்டினின் ஆதரவோடு வளர்க்கப்பட்ட வாக்னர் குழு இன்று அவருக்கு எதிராகவே திரும்பியுள்ளது எனக் கூறப்பட்டாலும் மாஸ்கோவில் ஆட்சி மாற்றமோ அல்லது புட்டினை வீழ்த்துவது அரிதே என ஊகிக்கப்படுகிறது.

தற்போதய சிக்கலின் பின்னணி என்னவென்று பார்த்தால் ,உக்ரேனிய வலிந்த எதிர் தாக்குதல்கள் முறியடிப்பின் பின்னரே ஊடகங்களின் போராக வாக்னர் குழு பற்றிய தகவல்கள் வந்துள்ளன.

கடந்த வாரம் உக்ரேனிய போர் நிலவரத்தில், ரஷ்யாவின் நட்பு நாடான பெலாரசில்அணு ஆயுதங்களை நிலைநிறுத்தப்போவதாக ரஷ்ய அதிபர் புட்டின்தெரிவித்துள்ளதுடன், அதேவேளை மேற்குலக படைபல ஆதரவுடன் உக்ரேனிய வலிந்த எதிர் தாக்குதல்கள் ரஷ்யாவால் முறியடிக்கப்பட்டுள்ளதை மேற்குலக ஊடகங்கள் உறுதிப்படுத்தி உள்ளன.

உக்ரேனின் வலிந்த எதிர்த்தாக்குதல் முயற்சியின் போது ரஷ்ய படைகளின் முறியடிப்புத் தாக்குதல்களால் பல உக்ரேனிய தாங்கிகள் அழிக்கப்பட்டதைக் காட்டும் வீடியோப் பதிவுகள் மேற்கத்திய ஊடகங்களிலும் வெளியாகி உள்ளன.

ரஷ்ய பாதுகாப்பு அமைச்சக வீடியோவை முழுமையாக ஆதாரப்படுத்தி ஏற்காவிட்டாலும், உக்ரேனின் 186 டாங்கிகள், 418 கவச வாகனங்கள் இழந்ததை கீவ் தலைநகரம் மறைமுகமாக ஏற்றுக் கொண்டுள்ளது.

**33 நாடுகளில் உக்ரைனிய வீரர்களுக்கு பயிற்சி:**

கடந்த வருடம் பிப்ரவரி 24, 2022 அன்று, ரஷ்யா உக்ரைனில் ஒரு சிறப்பு இராணுவ நடவடிக்கையின் பின், டொனெட்ஸ்க் மற்றும் லுகான்ஸ்க் மக்கள் குடியரசுகள் உக்ரேனிய படைகளின் கோரமான தாக்குதல்களின் கீழ் வாழ்ந்து வந்த டான்பாஸ் பிராந்தியத்தை விடுவிக்கும் நோக்கில் ரஷ்யாவின் சிறப்பு நடவடிக்கை ஆரம்பமாகியது.

ரஷ்யா எல்லையில் உக்ரைன் கடந்த சில நாட்களாக உக்ரைன் வலிந்த எதிர் தாக்குதலை (Counter offensive) நடத்தியது. அதில் ரஷ்யா கைப்பற்றிய சில கிராமங்களை மீட்டுள்ளதாக முதலில் தகவல் வெளியிட்டனர்.

ஆயினும் ரஷ்யாவின் எதிர் தாக்குதலால் இப்போரில் உக்ரைனுக்கு இழப்பு அதிகம் என கூறப்பட்டுள்ளது. ஆக மொத்தமாக போரின் திருப்பு முனையாக உள்ளக சதி மூலம் அதிபர் புட்டினை வீழத்த மேற்குலகும்- அமெரிக்காவும் முயல்கின்றன. இதற்கு ஒத்து ஊதும் வண்ணம் மேற்கத்தய ஊடகங்கள் பல கற்பனைக் கதைகளை பரப்புவது சகஜம்.

ஆயினும் மாஸ்கோவில் சதிப்புரட்சி சாத்தியமற்றதாகவும், ரஷ்ய அதிபர் புட்டினுக்கு ஏற்பட்ட நெருக்கடி தற்காலிகமானதாகவே தென்படுவதாக மாஸ்கோ ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# மோடி - ரணில் பேச்சு வார்த்தையில் 13வது திருத்தம்! தீர்க்கமான திருப்பம் ஏற்படுமா?

**இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 21ம் திகதி புதுடெல்லியில் சந்திக்கவுள்ள சூழ்நிலையில், 13வது திருத்தத்தை இந்திய அரசாங்கத்திடம் மீண்டும் வலியுறுத்த தமிழ்த் தேசியக் கட்சிகள் முனைந்து நிற்கின்றன.**

இலங்கைத் தீவின் இனப்பிரச்சினை தொடர்பில் பேசும் போதெல்லாம், இந்திய அரசாங்கம் 13வது திருத்தத்தை முன்நிறுத்தத் தவறுவதில்லை என்ற சூழ்நிலையில், இலங்கை ஜனாதிபதியுடனான பேச்சுவார்த்தையிலும், இந்தியப் பிரதமர் அதனை வலியுறுத்துவார் என்பதே, பல அரசியல் அவதானிகளின் உறுதியான கருத்தாக உள்ளது.

நீடித்துக் கொண்டிருக்கும் இலங்கையின் பொருளாதார நெருக்கடியில், கணிசமான சில முன்னேற்றங்கள், வெளிநாட்டு உதவிகள் காரணமாக, குறிப்பாக, சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவினால் ஏற்பட்டிருக்கும் நிலைமையில், மேலும் முன்னேறிச் செல்லவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அவரின் அரசாங்கமும் தீவிரமாக உள்ளன.

தொடரும் பொருளாதார நெருக்கடி நிலைமையில், மேலும் தளர்வுகளை ஏற்படுத்தி, நிலைமை கட்டுக்குள் வருவதை உறுதிப்படுத்தவும், தொடர்ந்து படிப்படியாக ஆக்கப்பூர்வமான மாற்றங்களைக் கொண்டு வரவும், ஜனாதிபதி மிகத் தீவிரமாகவும், அதீத நம்பிக்கையோடும் ஒரு போராட்டமே நடாத்திக் கொண்டிருக்கிறார் என்றால், அது உண்மை தான்!

ஆனால், அதே நேரத்தில், ஜனாதிபதி தேர்தலை அடுத்த வருடம் நடாத்தி, அதில் போட்டியிட்டு, வெற்றியீட்டி, நேரடித் தேர்தல் மூலம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியாக வரலாற்றில் தடம் பதிக்க வேண்டும் என்னும் ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் அபிலாஷை, அவரை ஒரே நேரத்தில் இன்னுமொரு போராட்டத்திலும் ஈடுபட நிர்ப்பந்தித்துள்ளது.

இலங்கைத் தீவின் அரசியல் களம் என்பது, ஆட்சி அதிகாரத்துக்காக போட்டியிடும் பல சிங்களத் தலைவர்களாலும், அவர்கள் சார்ந்த அரசியல் அணிகளாலும், மிகப் பாரதூரமாக பிளவுபடுத்தப்பட்டிருக்கும் காட்சியையே இப்போது தந்து நிற்கின்றது.

அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த அணிகளாக கருதப்படும் பல்வேறு அரசியல் முகாம்களைப் பொறுத்தமட்டில், அவற்றில் இரண்டினைத் தவிர, ஏனையவை தமக்கிடையில் ஒரு உடன்பாட்டுக்கு வருவதற்கு வாய்ப்புக்கள் எதுவும் இப்போது இல்லை.

மஹிந்த ராஜபக்சவின் பொதுஜன பெரமுனவும், ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசியக் கட்சியும், தமக்கிடையே சமீப காலமாயில் நிலவி வந்த, வரலாற்று ரீதியான அரசியல் பகைமையை தற்காலிகமாக மறந்துவிட்டு, கைகோர்க்க வேண்டிய அவசியத்தை, காலிமுகத் திடல் போராட்டமும், அதன் தொடர் விளைவுகளும் ஏற்படுத்தியிருந்தன.

தமது அரசியல் இருப்பை மாத்திரமன்றி, சொந்த - தனிப்பட்ட பாதுகாப்பையும் கூட, தக்க வைத்துக் கொள்வதற்கு ராஜபக்சாக்களுக்கு ரணில் விக்கிரமசிங்கவும் அவரது கட்சியும் தேவைப்பட்டதன் விளைவு தான், முதலில், ரணில் பிரதமர் ஆக்கப்பட்டதும், தொடர்ந்து ஜனாதிபதியாகி, அதற்கான பாராளுமன்ற வாக்கெடுப்பில் அவர் வெற்றியீட்டியதும் ஆகும்.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் முன் எப்பொழுதும் ஏற்பட்டிருக்காத, பாரிய அரசியல் நெருக்கடி ஒன்றின் போது, தனது கட்சியின் தனியொரு பாராளுமன்ற உறுப்பினராக, அதுவும் தேசியப் பட்டியல் உறுப்பினராக இருந்து கொண்டிருந்த ரணில் விக்கிரமசிங்க பிரதமராகி, தொடர்ந்து ஜனாதிபதி ஆகியது, அதி உயர் அரசியல் ஆச்சரியம்!

அந்த ஆச்சரியத்தின் கதாநாயகனான ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு மீண்டும் ஜனாதிபதி ஆவதற்கு ஆரம்பித்திருக்கும் அரசியல் போராட்டமும், பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை திட்டவட்டமாக மீட்டெடுப்பதற்காக பல நாடுகளுக்கு பறந்து சென்று, அவர் நடாத்திக் கொண்டிருக்கும் பொருளாதாரப் போராட்டமும், ஒரே இலக்கை நோக்கிய தனித்தனி போராட்டங்கள் என்ற போதிலும், அவை ஒன்றோடொன்று இணைந்தும் பிணைந்தும் நிற்பது கண்கூடாகவே தெரிகின்றது.

இந்த இரண்டு போராட்டங்களையும், தனது சொந்த அரசியல் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் நடாத்திக் கொண்டிருக்கும் ரணில் விக்கிரமசிங்கவின் தன்னம்பிக்கையை, பாராட்டத் தான் வேண்டும்.

அபாரமான தன்னம்பிக்கை இல்லாமல், அவர் முதலில் பிரதமராகி, தொடர்ந்து ஜனாதிபதி ஆகியிருக்க முடியாது.

அந்தப் பதவியில் தொடர்ந்து நீடிப்பதற்கும், அடுத்த ஜனாதிபதி தேர்தலில் வெற்றியீட்டுவதற்கும் ரணில் விக்கிரமசிங்கவின் தன்னம்பிக்கை எவ்வளவு தூரம் கைகொடுக்கும் என்பதற்கு, காலந்தான் பதில் சொல்ல வேண்டும். அதுவும் நீண்டதொரு காலம் அல்ல.! அடுத்து வரும் சமீப எதிர்காலம்!!



## ரணிலின் ராஜதந்திரம் மோடியிடம் எடுபடுமா...?

இந்த அரசியற் சூழ்நிலையில், தனது அரசியல் தளமாக இப்போது மாறியிருக்கும் பொதுஜன பெரமுன தரப்பிலிருந்து, எழுந்து கொண்டிருக்கின்ற பிரச்சினைகளையும், இனிமேல் எழக்கூடிய பிரச்சினைகளையும் ரணில் எப்படி சமாளிக்கப் போகிறார் என்பது, சிக்கல் நிறைந்ததாக இருந்தாலும் சுவாரசியமான கேள்வி தான்!

ரணிலுக்கு பொதுஜன பெரமுன தேவை. பொதுஜன பெரமுன இல்லாமல் அவரின் அரசியல் அசையாது. பொதுஜன பெரமுனவுக்கு, குறிப்பாக, அதனைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ராஜபக்சாக்களுக்கு இப்போதும் ரணில் தேவை. ராஜபக்சாக்களின் அரசியல் இருப்புக்கான உத்தரவாதமே ரணில் தான்! அவர் கை கொடுத்திருக்காவிட்டால் ராஜபக்சாக்களின் கதை எப்போதோ காலியாகியிருக்கும்!!

இந்தப் பின்னணியில் தான், 'உங்களுக்கு நான் - எனக்கு நீங்கள்' என்ற, எழுதப்படாத அரசியல் சூத்திரத்தின் அடிப்படையில், ஜனாதிபதி ரணிலின் ஆட்சி ராஜபக்சாக்களின் ஆதரவோடு தொடர்கிறது. ராஜபக்சாக்களின் அரசியல் இருப்பும் தொடர்ந்து பாதுகாப்பாகவே உள்ளது.

ஆனால், இப்போதுள்ள இந்த நிலைமை, தொடர்ந்து கணிசமான காலம் நீடிக்கும் என்று உறுதியாக கூற முடியாது. ஆகவே, 'இப்போது உள்ள நிலைமை - இனி எப்போதும்' என்கிற கதைக்கே இடம் இல்லை.

தென்னிலங்கை அரசியல் களம் தொடர்ந்து சதுப்பு நிலமாகவே உள்ளது என்பதும், அதில் ஆடுவதும், ஓடுவதும் மிக அவதானத்தோடு மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதும், ஜனாதிபதி ரணிலுக்கோ, அவரைத் தாங்கிப் பிடிக்கும் பொதுஜன பெரமுனவின் மஹிந்த ராஜபக்சவுக்கோ, எவரும் சொல்லிக் கொடுக்க வேண்டிய விடயங்கள் அல்ல.

இப்போது நிலைமை ஓ.கே! ஆனால் ஜனாதிபதி தேர்தல் வரும் போது, ஒரு ராஜபக்ச, குறிப்பாக பசில் ராஜபக்ச பொதுஜன பெரமுன சார்பில் களமிறங்க முன்வந்தால் நிலைமை தலை கீழாகி விடும்.

ஒன்றில் அந்த ராஜபக்ச - அது எவராக இருந்தாலும், பின்வாங்க வேண்டும். அல்லது, அந்த ராஜபக்சவுக்கு வழிவிட்டு ரணில் ஒதுங்க வேண்டும். இந்த இரண்டில் ஒன்று தான் நிகழ முடியும்.

ஆனால், இத்தனைக்கும் பிறகு, தனது அரசியல் வாழ்வின் உச்சக்கட்டத்தை எட்டும் நிலைக்கு வந்திருக்கும் ரணில், வேறு எவருக்காவது விட்டுக் கொடுப்பாரா என்பது ஒரு விசித்திரமான கேள்வியே! விடை அளிப்பதும் கடினமே!!

ஆனால், அரசியலில் எதுவும் நடக்கலாம், எப்போதும் நடக்கலாம். அவற்றைப்பற்றி எல்லாம் இப்போது பேசுவதில் அர்த்தமில்லை. வரும் போது பார்த்துக் கொள்ள வேண்டியது தான்.

ஆனால், இப்போது ரணிலை பொறுத்தமட்டில், அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறுவதே அவரின் ஒரே இலக்கு! அதனை நோக்கித்தான் காய்களை அவர் நைசாக நகர்த்திக் கொண்டிருக்கின்றார்.

தன்னுடன் இணையக் கூடியவர்களை இழுக்கவும், தன்னை அணைக்கக் கூடியவர்களை அழைக்கவும் அவர் எப்போதும் றெடி! அவர் விரித்துக் கொண்டிருக்கும் தந்திர வலைக்குள் எத்தனை மீன்கள் சிக்கப் போகின்றன என்பதை காண்பதற்கு நீண்ட காலம் காத்திருக்க வேண்டியதில்லை. விரைவிலே அடுத்தடுத்து, பரபரப்பான காட்சிகள் பலவற்றைப் பார்க்க முடியும்.

பல எதிரணி அரசியல்வாதிகள் - சில தமிழ், முஸ்லிம் பிரமுகர்கள் உட்பட - விரைவில் ரணில் பக்கம் தாவுவதை காண முடியும். அதற்கான முஸ்தீபுகளும், முயற்சிகளும் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு தீர்க்கமான கட்டத்தை தொட்டு நிற்கின்றன.

இந்தச் சூழ்நிலையில் வடகிழக்குக்கு வெளியே வாழும் தமிழர்களினதும், நாடு முழுவதும் பரந்து வாழும் முஸ்லிம் மக்களினதும், சிங்கள கத்தோலிக்க மற்றும் கிறீஸ்தவ மக்களினதும் ஆதரவு தனக்கே என்ற கணக்கின் அடிப்படையில் தான், ரணிலின் நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டு வந்திருக்கின்றன.

இந்த நிலையில், சமுர்த்தி கொடுப்பனவு தொடர்பில் ஏற்பட்டிருக்கும் சலசலப்புகளும் எப்படியாவது சமாளிக்கப்பட்டு விடும் என்று நம்பிக்கையோடு எதிர்பார்க்கலாம்.

வடகிழக்கு மாகாணங்களைப் பொறுத்தமட்டில், எதிரணியில் இருந்து கொண்டிருக்கும் தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகளில், பலரை எப்படி வளைப்பது என்பது ரணில் தரப்புக்கு நன்றாகத் தெரியும். ஏற்கனவே, ஒரு சிலரை வளைத்துப் போட்ட அனுபவமும் வேறு இருக்கின்றது. ஆகையால், அவரைப் பொறுத்தமட்டில், அது பெரும் பிரச்சினையாக இருக்கப் போவதில்லை.

**ஆனால், ஜனாதிபதி தேர்தல் வரும் போது ரணிலை ஆதரிப்பதற்கு, எதிர்த்தரப்பிலிருக்கும் எந்தவொரு தமிழ்க் கட்சியாவது முன்வந்தால், அதை நியாயப்படுத்த வேண்டிய அவசியம் அந்தக் கட்சிக்கு கட்டாயம் இருக்கும்.**

**இப்போது தமிழ்க் கட்சிகளை தன்னுடன் இணைந்து பணியாற்ற வருமாறு, தொடர்ந்து, இடைக்கிடையே அழைப்பு விடுத்து வரும் ரணில், அந்த அரசியல் யதார்த்தத்தை மனதில் வைத்துத் தான் சமீபத்தில் சில தடாலடி நடவடிக்கைகளை எடுத்திருந்தார்.**

தொடர்ந்து தமிழ் மக்களுக்கு தொல்லைக் கொடுத்து வந்திருக்கும் தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளராக இருந்து, பதவியை விட்டு ஓட வேண்டிய நிலைமைக்கு சில நாட்களுக்கு முன் தள்ளப்பட்ட, பேராசிரியர் மனதுங்கவின் விவகாரம், இதற்கு ஒரு நல்ல உதாரணம்.

ஜனாதிபதி ரணில் முன்னிலையில் மனதுங்க "தெனாவெட்டாக" கதைத்தது, ஜனாதிபதி ரணிலுக்கு எரிச்சலூட்டியது என்பது உண்மையே! அதைப் புரிந்து கொள்ள முடியும். ஆனால், அதற்கு அப்பால், அந்த சந்தர்ப்பத்தில், வரலாறு தொடர்பிலும், செல்வாக்கு மிக்க பிக்குகளின் கோரிக்கைகளின் பேரில், சில புத்த விகாரைகளுக்கு வகை தொகையின்றி அரச காணிகள் ஒதுக்கப்பட்ட சமாச்சாரங்கள் பற்றியும், தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்ட அதே கூட்டத்தில் வைத்து, ரணில் தெரிவித்த கருத்துக்கள் காத்திரமானவை மட்டுமல்ல, தொல்பொருள் திணைக்களத்தின் தொல்லைகளால் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வந்திருக்கும் தமிழ் மக்களின் மனக் காயங்களுக்கு ஒத்தடம் கொடுக்கும் விதத்தில், அர்த்தபுஷ்டியோடு வெளியிடப்பட்டவையும் கூட என்பதையும், அரசியல் அவதானிகள் பலரும் கட்டாயம் கவனத்தில் எடுத்திருப்பார்கள்.

மிகுதி அடுத்த பக்கம் பார்க்க...

# தமிழ்க் கட்சிகள் என்ன செய்யப் போகின்றன...?

இந்த பின்புலத்தில் தான், இப்போது ரணில் விக்கிரமசிங்கவின் புதுடெல்லி விஜயத்தை ஆழமாக உற்று நோக்க வேண்டியுள்ளது.

13வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறும், வடக்கு, கிழக்கு மாகாண சபைகள் உட்பட, அனைத்து மாகாண சபைகளுக்குமான தேர்தல்களை ஒன்றாக நடாத்தாவிட்டாலும், பகுதி பகுதியாக நடாத்துமாறும், இந்திய அரசாங்கத் தரப்பினால் இலங்கை ஜனாதிபதியிடம் சொல்லப்படும் என்று உறுதியாகக் கூற முடியும்.

**இந்திய அரசாங்கம் காலத்தால் செய்த உதவியினால் தான், பொருளாதார ரீதியாக இலங்கையால் மூச்சுவிட முடிகிறது. இந்தியா தான், பொருளாதார நெருக்கடியின் போது முதல் - உதவியை செய்தது. மற்ற நாடுகள் பிறகு தான் வந்தன. இலங்கையின் நம்பிக்கைக்குரிய, நெருங்கிய நண்பனான சீனா, மிகவும் 'லேற்றாக' தான், அதுவும் கடன் தொடர்பில் கறாரான நிபந்தனைகளோடு, வந்து சேர்ந்தது! சுவாசிக்க முடியாமல், திணற ஆரம்பித்திருந்த இலங்கைக்கு, பிராணவாயு கொடுத்து காப்பாற்றியது இந்தியா தான் என்பதை ரணில் மறக்க முடியாது.**

இந்தச் பின்னணியில், மோடி – ரணில் சந்திப்பு என்றோ நிகழ்ந்திருக்க வேண்டும். ஆனால் நிகழவில்லை! ரணில் விரும்பினார். ஆயினும், இந்திய தரப்பில் தாமதம் காட்டப்பட்டது. அது வேண்டுமென்றே காட்டப்பட்ட தாமதம்! அர்த்தத்தோடு கூடிய தாமதம்!!

இந்தியாவை பொறுத்தமட்டில், ரணிலின் ராஜதந்திரம் ஒரு போதும் பெரிதாக எடுபடாது. ஜனாதிபதி ரணில் தன்னை முழுமையாக இந்தியாவுக்கு இன்னமும் நிரூபிக்கவில்லை. முதலில் இந்தியா! பிறகுதான் மற்ற நாடுகள்!! என்ற நிலைபாட்டுக்கு ரணில் வராத வரையில், இந்தியத் தரப்பில் இத்தகைய அணுகுமுறை தான் நீடிக்கும்.

கணிசமான காலமாக இந்தியா வலியுறுத்தி வந்திருக்கும், 13வது திருத்தத்தினை நடைமுறைப்படுத்தல் என்னும் விவகாரமும், மாகாணசபைத் தேர்தல்கள் பற்றிய விடயமும், புதுடெல்லி பேச்சுவார்த்தைகளில் விவாதிக்கப்பட்டே தீரும்.

13வது திருத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்துவது தொடர்பில், பௌத்த, சிங்கள இனவாதிகள் மற்றும் அரசியல் பேசும் தீவிரவாத பௌத்த பிக்குகள் மத்தியில் ஊறிப் போயிருக்கும் எதிர்ப்பு, இந்த விவகாரத்தில், ரணில் காட்டக் கூடிய எந்தவொரு ஆக்கபூர்வமான அணுகுமுறைக்கும் எதிராக, மூர்க்கத்தனமாக மூண்டெழும் என்பது தெரிந்ததே!

ஜனாதிபதி தேர்தல் ஒன்றை நாடு எதிர்நோக்கி நிற்கும் நிலையில், இந்த எதிர்ப்பலையை அநாவசியமாக சம்பாதிக்க ரணில் விரும்பமாட்டார். இது ஒரு ஆபத்தான சமாச்சாரம்.

ஆகவே, 13 தொடர்பில் இந்தியாவை அதிருப்திப்படுத்தாமல், நல்ல பிள்ளையாக நடந்து, நம்பிக்கையூட்டும் வாக்குறுதிகளை வழங்கி, பொருளாதார ரீதியிலான ஒத்துழைப்புக்களையும் மேலும் உறுதிப்படுத்திக்கொண்டு, நாடு திரும்பவே ரணில் விரும்புவார். அதைத் தான் அவரிடம் எதிர்பார்க்க முடியும்.

ஆனால், 13ன் பிரகாரம், காணி - பொலீஸ் அதிகாரங்களை மாகாணசபைகளுக்கு வழங்குவதன் மூலம், வடக்கு, கிழக்கு மாகாணசபைகளுக்கும் அவை கிடைப்பதை, ஜனாதிபதி தேர்தல் வரையில் ரணிலால் 'சீரியஸ்' ஆக சிந்தித்துப் பார்க்கவே முடியாது. இது தான் இலங்கைத் தீவின் இன்றைய அரசியல் யதார்த்தம்!

அதே வேளையில், இந்த விடயத்தில், இந்திய தரப்பு மெலிதான அழுத்தத்தினைத் தான் காட்டும் என்றால், அதை கையாள்வது என்பது ரணிலுக்கு ஒரு பிரச்சினையே அல்ல.

13 தொடர்பில் இந்தியாவின் நிலைப்பாடு என்பது, கடந்த காலங்களைப் போல் இல்லாமல், கணிசமான தாக்கத்தோடு கூடிய அழுத்தமாக இருந்தால் ஒழிய, 13 இப்போதைக்கு இருக்கும் இடத்திலேயே தொடர்ந்து இருக்க வேண்டியது தான்!

ஆனால் இந்தியத் தரப்பு, இதில் ஓரளவு பிடிவாதத்தை காட்டினால் மட்டுமே, விடயங்கள் நகரத் தொடங்கும். அப்போதும் கூட, தனது அரசியல் குருவான, தாய் வழி மாமா - முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனவிடம், ரணில் கச்சிதமாக கற்றுக்கொண்டுள்ள அரசியல் ராஜதந்திரப் பாடம், இந்தியாவிடம் பிடி கொடுக்காமலும், அதே நேரம் உரசிக் கொள்ளாமலும், இந்தச் சங்கடமான சூழ்நிலையை சாதுரியத்தோடு கையாள்வதற்கு, ஓரளவுக்காவது ரணிலுக்கு கைகொடுக்கும் என்று துணிந்து கூற முடியும்.

## துணிவோடு செயற்படுமா அல்லது பணிவோடு நடக்குமா...?

**இந்த நிலையில், இந்திய அழுத்தம் என்பது, தமிழ்த் தேசியக் கட்சிகளின் அணுகுமுறையை பொறுத்தும் உள்ளது என்பதை தமிழர் தரப்பு மறந்துவிடக் கூடாது.**

**13வது திருத்தத்தை, அதன் மூல வடிவில், முழுமையாக இலங்கை அரசு நடைமுறைப்படுத்துவதற்கு ஆவன செய்யுமாறு இந்தியப் பிரதமரிடம் தமிழ்த் தேசியக் கட்சிகள் வேண்டுகோள் விடுப்பது காலத்தின் தேவை... கட்டாயமான தேவை...**

**ஆனால், வெறும் வேண்டுகோள் மாத்திரம் எதையும் கொண்டு வராது.**

கடந்த 36 வருட காலமாக, 13வது திருத்தம் தொடர்பில், இலங்கை அரசு நேர்மையாக நடந்து கொண்டிருக்கவில்லை.

2009ற்கு முன்னர், ஒரு சில இடைவேளைகளோடு யுத்தம் தொடந்து நடந்தது, தமிழ் ஈழ விடுதலைப் புலிகளோடு பேச்சுவார்த்தைகளும் நடந்தன - முறிந்தன என்பதெல்லாம் உண்மைதான்.

ஆனால், 2009 வைகாசி மாதம், இந்தியா உட்பட, பல வெளிநாடுகளின் உதவியோடு யுத்தம் வெற்றிகரமாக முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பிறகு, கடந்த 14 வருட காலமாக, 13வது திருத்தத்தை, காணி, பொலீஸ் அதிகாரங்களோடு முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு மறுத்தது யார்? தடையாக இருந்தது யார்?

அடுத்தடுத்து பதவி வகித்த அனைத்து ஜனாதிபதிகளும் ஆளுங் கட்சிகளுமே இதற்குப் பொறுப்பு.

அதே வேளையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜோடியின் நல்லாட்சிக் காலத்தில், அரசியல் தீர்வு புது வருடத்தோடு வருகிறது! தீபாவளியோடு வருகிறது!! என்றெல்லாம், சாப்பிட மறுக்கும் குழந்தைகளுக்கு அம்புலி மாமாவைக் காட்டி உணவூட்டும் அம்மாக்களை நினைவூட்டும் விதத்தில், தம்மை நம்பி நின்ற தமிழ் மக்களையும் ஏமாற்றி, தம்மையும் ஏமாற்றிக் கொண்ட, அன்றைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைக் கட்சியான தமிழரசுக் கட்சியின் பெருந் தலைவரும், அவரின் அரசியல் சட்ட ஆலோசகரும் கூட, இந்த விடயத்தில் 'அரசனை நம்பி புருசனைக் கைவிட்ட' அசட்டுப் பெண்மணியைப் போல, செயற்பட்டிருந்ததையும் இந்த சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்டியே தீர வேண்டும்.

சரி! அது போகட்டும்!!

இப்பொழுது 13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்தத் தயார் என, சில சந்தர்ப்பங்களில் பகிரங்கமாகப் பேசிய ஜனாதிபதி தலைமை தாங்கும் ஆளும் கூட்டணி மட்டுமன்றி, அந்தத் திருத்தத்திற்கு ஆதரவளிக்க தயார் என அறிவித்த சஜித் பிறேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியும், ஜே.வி.பியின் அநுரகுமார திசநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியும், பிரதான அரசியல் அணிகளாக அரசியல் அரங்கில் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கையில், 13வது திருத்தத்திற்கு சிங்கள பௌத்த இனவாதிகள் மத்தியிலிருந்து எழுந்திருக்கும் எதிர்ப்பை புறந்தள்ளிச் செயற்பட, ஜனாதிபதி ரணில் தயார் இல்லை எனில், இனி எப்போது தான் 13வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது?

நல்லதோர் வரலாற்றுச் சந்தர்ப்பம், இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரத்தில், ஜனாதிபதி ரணிலின் முன்னால் எழுந்திருக்கும் நிலையில், அவர் அதை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்த தயாரில்லை என்பதும், பயன்படுத்தப் போவதில்லை என்பதும் உண்மையிலேயே, இலங்கைத் தீவின் சாபக்கேடே அன்றி வேறல்ல.

இதே ரணில் தான், விடுதலைப் புலிகள் இயக்கம், போர்க்களத்தில் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்த காலக்கட்டத்தில், 2002ல் அந்த இயக்கத்தின் தலைவர் பிரபாகரனோடு சமாதான உடன்பாடு செய்து கொண்டார் என்பதும், அந்த உடன்பாட்டின் அடிப்படையில், வடகிழக்கு மாகாணத்திற்கு ஒரு இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை, கிட்டத்தட்ட பலஸ்தீனத்தின் நிர்வாகக் கட்டமைப்பின் பாணியில் ஏற்படுத்தும் அளவுக்கு, அரசியல் முதிர்ச்சியோடும், துணிவோடும் செயற்பட்டிருந்தார் என்பதும், அன்றைய ஜனாதிபதி சந்திரிகா அந்த ஏற்பாட்டை குலைத்திருக்காவிடில், வரலாறு ஒரு வேளை வேறுவிதமாக போயிருக்கும் என்பதும் இந்த சந்தர்ப்பத்தில் நினைத்துப் பார்க்க கூடிய விடயங்களே!

ஆனால் இன்றுள்ள ஜனாதிபதி ரணிலின் அரசியல் நோக்கும் அணுகுமுறையும் முற்றிலும் வித்தியாசமானவை! இடையில் எத்தனையோ நிகழ்வுகள் நடந்தேறி, அரசியல் சூழ்நிலையே முற்றாக மாறி விட்டுள்ளது.

**தலைகீழாக மாறி நிற்கும் இன்றைய நிலைமையில், தமிழ்த் தேசியக் கட்சிகள் தீர்க்கமான ஒரு முடிவுக்கு வந்தாக வேண்டும்.**

யதார்த்தத்தை உணர்ந்து, கடந்த காலத் தவறுகளை மனதில் இருத்தி, விவேகத்தோடும், துணிவோடும் செயற்பட வேண்டிய பாரிய கடமை அனைத்துத் தமிழ்த் தேசியக் கட்சிகளையும் சார்ந்திருக்கின்றது.

**இந்த ஆண்டு முடிவடைவதற்குள் 13வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவும், மாகாணசபை தேர்தல்களை நடாத்தி, வடக்கு, கிழக்கு மாகாணசபைகள் உட்பட, சகல சபைகளின் நிர்வாகத்தையும் மக்கள் பிரதிநிதிகளிடம் கையளிக்கவும் சாத்தியமில்லை என்றால், தொடர்ந்து 13வது திருத்தத்தைப் பற்றி, தொண்டை வரளப் பேசிக் கொண்டிருக்க தாம் தயாரில்லை என்பதை, இந்தக் கட்சிகள் அனைத்தும் ஒரே குரலில் இந்திய அரசுக்கு தெரிவிக்க முன்வர வேண்டும்.**

**இந்திய - இலங்கை ஒப்பந்தம், கொழும்பில் கையெழுத்திடப்படுவதற்கு முதல் நாள், 1987 ஆடி மாதம் 28ம் திகதி இரவு, புதுடெல்லியில், அன்றைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி, ஈழத் தமிழர் தரப்புக்களுடன் அடுத்தடுத்து நடாத்திய, மூன்று தனித்தனியான சந்திப்புக்களின் போது, அவரால் வழங்கப்பட்ட உறுதிமொழிகளின் அடிப்படையிலேயே, ஒப்பந்தத்திற்கான சம்மதம் தெரிவிக்கப்பட்டது என்பதும், இப்போது 13வது திருத்தம் என்பது, பிராந்திய வல்லரசான இந்தியாவுக்கு ஒரு கௌரவப் பிரச்சினையாகவும் மாறியுள்ளது என்கின்ற உண்மையும், இந்திய அரசுக்கு எடுத்துரைக்கப்பட்டே ஆக வேண்டும்.**

**இன்றைய நிலையில் 13வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது சாத்தியம் இல்லை என்றால், அடுத்தது என்ன?**

**ஒரே நாட்டிற்குள் சமஷ்டி எனப்படும் இணைப்பாட்சியா? அல்லது, பொது வாக்கெடுப்பு ஒன்றின் மூலம், எமது சுயநிர்ணய உரிமையை பிரயோகித்து தமிழர்கள் நாமே முடிவெடுப்பதா?**

13க்கு சம்மதிக்காதவர்கள், இணைப்பாட்சியை கனவிலும் கூட ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்பது வெளிப்படை.

அந்த அடிப்படையில், தமிழ்த் தேசத்தின் முடிவு எதுவாக இருக்க முடியும்?

**26 வருட கால யுத்தம், லட்சக்கணக்கில் உயிர்ப்பலிகள், தமிழ் மண்ணே ரத்தத்தில் நனைந்த துன்ப வரலாறு!**

**இந்த சோகத்திலும், தமிழர் தேசம் சுதந்திரமாக வாழவே விரும்புகிறது என்பதை, 13வது மறுக்கப்பட்டால், தமிழர் தரப்பிலிருந்து உலகம் அறிய உரத்துச் சொல்ல தமிழ்த் தேசியக் கட்சிகள் தயாரா?**

**இரண்டொரு கட்சிகள், ஏதேதோ காரணங்களைக் காட்டி ஒதுங்கி நின்றாலும், ஏனைய கட்சிகள் அனைத்தும், ஒற்றுமையாக, ஒரே குரலில் பேசத் தயாரா?**

2024 ஒரு வேளை பதில் கூறலாம்..!

பார்த்தசாரதி



# ஆயதப் போராட்டம் தமிழினத்தின் மீது திணிக்கப்பட்டது! இப்போது நடந்து கொண்டிருப்பது மௌன யுத்தம்!!

## கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் கருணாகரன் தெரிவிப்பு




இந்த நாட்டில் தமிழ் மக்களின் விகிதாசாரத்தை குறைக்க வேண்டும் என்ற நோக்கில் திட்டமிட்டு 1949ம் ஆண்டு முதல், அன்றைய பிரதமரான டி.எஸ். சேனநாயக்கா கிழக்கு மாகாணத்திலே கல்லோயா குடியேற்றத்தை ஆரம்பித்து வைத்த காலம் தொடக்கம் இன்று வரை தமிழ் மக்களின் காணிகள் அபகரிக்கப்பட்டு வருவதுடன் அவற்றில் சிங்களக் குடியேற்றங்களும் பௌத்தமயமாக்கலும் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வடக்கு - கிழக்கில் இப்போது நடந்து கொண்டிருப்பது ஒரு மௌன யுத்தம்! - இவ்வாறு, மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஓர் அங்கத்துவ கட்சியான தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமும், கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளருமான கோவிந்தன் கருணாகரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு நகரில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் பத்மநாபா மற்றும் பல முன்னணிப் பிரமுகர்கள், உறுப்பினர்கள் தமிழ் நாட்டில், சென்னையில் 1990 ஜூன் மாதம் 19ம் திகதி படுகொலை செய்யப்பட்டதை நினைவு கூரும் 33வது அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே கருணாகரன் எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றுகையில் அவர் தெரிவித்ததாவது.

தமிழ் மக்கள் ஆயுத போராட்டத்தை விரும்பி ஏற்றுக்கொண்டவர்கள் அல்ல ஆயுதப் போராட்டம் எங்கள் மீது திணிக்கப்பட்டது. இலங்கை சுதந்திரம் அடைந்த நாளில் இருந்து, தமிழினம் இரண்டாம் தர பிரஜைகளாக்கப்பட்டது. தனச் சிங்களச் சட்டம் கொண்டுவரப்பட்டதிலிருந்து தமிழர்களுக்கு எதிராக 1956, 1958, 1977இல் அரங்கேற்றப்பட்ட கலவரங்களைத் தொடர்ந்து, மிகவும் மோசமாக 83 கலவரத்தை உருவாக்கி, வட கிழக்கு மாகாணங்களுக்கு தமிழர்கள் கப்பல்கள் மூலம் சொந்த நாட்டிலேயே அகதிகளாக அனுப்பப்பட்டனர் என்பது வரலாறு ஆகும்.

83 கலவரத்தை அடுத்து, ஈழ விடுதலைப் போராட்டம் ஒரு வித்தியாசமான பாதைக்குத் தடம் மாறி, ஆயுதப் போராட்டமாக பரிணமித்தது.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன காலத்தில், சமாதானப் பேச்சுக்கே இடமில்லாமல் தமிழ் மக்களின் குரல் வளையை ஆட்சியாளர்கள் தொடர்ந்து நசுக்கினர். 2009 வரை தமிழ் மக்களை வஞ்சித்துக் கொன்று கொண்டிருந்த சிறிலங்கா அரசு, ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின், வட கிழக்கில் வித்தியாசமான திணிப்பை செய்து வருகின்றது.

தமிழர் தேசத்தில் விகாரைகளை அமைக்க வேண்டும், தமிழரின் குடிப்பரம்பலை மிக வேகமாக மாற்றியமைக்க வேண்டும். இணைந்திருந்த வடகிழக்கை, வெலிஓயா குடியேற்றம் மூலம் பிளந்து, நிலத் தொடர்பு அற்ற பிரதேசமாக, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை நிரந்தரமாக பிரிக்கும் நடவடிக்கை திட்டமிட்டு அரங்கேற்றப்பட்டு வருகின்றது.

இன்றைய எதிர்க்கட்சித் தலைவரான சஜித் பிரேமதாச, நல்லாட்சிக் காலத்தில் புத்த சாசன அமைச்சராக இருந்த போது வடகிழக்கில் 1000 விகாரைகளை அமைக்க வேண்டும் என பகிரங்கமாக அறிவித்திருந்தார். இப்போது இலங்கையில் 1000 தாது கோபுரங்களை படிப்படியாக அமைக்க வேண்டும் என அவர் கூறியுள்ளார்.

தற்போது வடகிழக்கில் நடந்து கொண்டிருப்பது ஒரு மௌன யுத்தம். தமிழ் மக்களின் காணிகள் அபகரிப்பு, தமிழர் பிரதேசங்கள் எங்கும் விகாரைகள் அமைப்பு என முனைப்புடன் பேரினவாத நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக உயர்ந்த நிலப் பகுதிகளில் விகாரைகள் அமைக்கப்பட்டு சுற்றுலாப்பயணிகளுக்கு கூட, இலங்கை ஒரு பௌத்த நாடு என்று பறைசாற்றுவதற்கு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உதய கம்மன்பில, சரத் வீரசேகர, விமல் வீரவங்ச போன்ற அரசியல்வாதிகள் தங்கள் பௌத்த சிங்கள பேரினவாத நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் செயலாற்றி வருகின்றனர். வடகிழக்கு மாகாணங்களை தமிழர் தாயகம் எனக் கூறும் தமிழர்களுக்கு எச்சரிக்கை விடுப்பதாக சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

நாடு சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்தே தமிழர்கள் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்காக தொடர்ச்சியாக பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வந்திருக்கின்றார்கள். பண்டா-செல்வா ஒப்பந்தம், டட்லி-செல்வா ஒப்பந்தம், திம்பு பேச்சுவார்த்தை, பின்னர் 1990களின் நடுப்பகுதியில் மீண்டும் பேச்சுவார்த்தை, 2002ல் பேச்சுவார்த்தை எனத் தொடர்ந்து வந்த நிலையில், 2009இன் பின் அப்போதைய ஜனாதிபதி மஹிந்தவோடு 18 சுற்று பேச்சுவார்த்தை நடைபெற்று முடிந்தபின் தற்போதும் ஜனாதிபதி ரணிலுடன் தொடர்ந்து பேச்சு வார்த்தை நடந்து கொண்டுதான் இருக்கின்றது.

1987 இலங்கை - இந்தியா ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. அதன் மூலம் உருவாகிய குறைமாத குழந்தையாக மாகாணசபை முறை ஏற்படுத்தப்பட்டது. இதற்காக 13வது திருத்தச் சட்டத்தை, இனப்பிரச்சினைக்கான முற்று முழுதான தீர்வாக தமிழ் மக்கள் தரப்பில் யாரும் ஏற்றுக்கொள்ளவில்லை.

அரசியல் அதிகாரத்தில் ஆசையின்றி, கிடைப்பதை ஏற்றுக்கொண்டு அதிலிருந்து முன்னேறிச் செல்வோம் என்ற அடிப்படையில் வடகிழக்கு மாகாண சபையின் அதிகாரத்தை பெற்றுக் கொண்ட முதல் தலைவர் காலஞ்சென்ற பத்மநாபா ஆவார். அதிகார ஆசை இல்லாத காரணத்தினால் தான், முதலமைச்சர் பதவியையும் அவர் ஏற்றுக்கொள்ளவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, விடுதலைப்புலிகள் இயங்கிக் கொண்டிருந்த காலத்தில், 2001ல் உருவாக்கப்பட்டது. கடந்த கால, கசப்பான சம்பவங்களை மறந்து, தமிழ் மக்களுக்கு ஒரு பலமான அரசியல் சக்தி இருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்த கூட்டமைப்பை உருவாக்கினோம்.

2009 வரையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அசைக்க முடியாத சக்தியாக இருந்தது. 2010ல் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் வெளியேறியது. 2015ல் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வெளியேறியது, 2023இல் தமிழரசுக் கட்சி வெளியேறியுள்ளது.

ஆனாலும், ஐந்து கட்சிகளைக் கொண்ட ஒரு பலமான அரசியல் அணியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப்பொழுது செயற்படுகின்றது.

**தற்போதைய ஜனாதிபதி ஒரு சர்வதேச அழுத்தத்தின் மத்தியிலே இந்த நாட்டை வழிநடத்துகின்றார். அதற்கு நடுவிலும், தமிழ் மக்களின் காணிகள் அபகரிக்கப்பட்டு வருவதுடன், அவற்றில் சிங்கள குடியேற்றங்களும் பௌத்த மயமாக்கலும் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன. வடக்கு கிழக்கின் தற்போது நடந்து கொண்டிருப்பது ஒரு மௌன யுத்தம்.**

# ஈழத்துக் கவிஞர் தீபச்செல்வன்

## அமெரிக்கா செல்ல விசா மறுப்பு!



ஒடுக்கப்பட்ட ஈழத்து மக்களின் குரலாய் இந்த மண்ணில் வாழ்ந்து உரிமைகளைப் பெறுவதே என் எண்ணம்!

அமெரிக்காவில் நடைபெறும் இலக்கிய மாநாட்டுக்குச் செல்வதற்காக விண்ணப்பித்திருந்த ஈழத்துக் கவிஞர் தீபச்செல்வனுக்கு விசா மறுக்கப்பட்டுள்ளது.

இரண்டு முறை விண்ணப்பித்திருந்தும் அமெரிக்கத் தூதரகம் தனக்கு விசா வழங்க மறுத்துவிட்டதாகக் கூறியிருக்கும் தீபச்செல்வன், எதிர்காலத்தில் அயல்நாடான இந்தியாவுக்குச் செல்லவும் தனக்கு விசா மறுக்கப்படலாம் என்று கவலை தெரிவித்துள்ளார்.

மேலும் நாவலாசிரியர், கவிஞர், சிறுகதை எழுத்தாளர், திரைப்படப் பாடலாசிரியர், வசனகர்த்தா எனப் பல தளங்களில் இயங்கி வருபவர் கவிஞர் தீபச்செல்வன். அவர் எழுதிய 'பதுங்கு குழியில் பிறந்த குழந்தை', 'நான் ஸ்ரீலங்கன் இல்லை' ஆகிய கவிதைத் தொகுப்புகளும், 'நடுகல்' என்ற நாவலும் தமிழ் வாசகப் பரப்பில் மிகுந்த கவனம் பெற்றவை. சமீபத்தில் அவர் எழுதிய 'பயங்கரவாதி' நாவல் வெளியாகி நல்ல வரவேற்பைப் பெற்றிருக்கின்றது.

இந்நிலையில், அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள வட அமெரிக்க தமிழ் சங்கத்தின் (FeTNA) 36 ஆவது தமிழ் விழா ஜூன் 30 ஆம் திகதி தொடங்குகின்றது. இந்த நிகழ்வில் பங்குபெறுமாறு தீபச்செல்வனுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இதற்காக இலங்கைத் தலைநகர் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் விசாவுக்காக அவர் விண்ணப்பித்திருந்தார். ஆனால், அவர் நாடு திரும்புவார் என்ற நம்பிக்கை அல்லது முகாந்திரம் இல்லை, அமெரிக்காவில் குடியேறிவிடுவார் என்று கூறி அமெரிக்கத் தூதரகம் அவருக்கு விசா வழங்க மறுத்துவிட்டது. இரண்டாவது தடவையாக விசா கோரி விண்ணப்பித்தபோதும், அதே காரணம் கூறப்பட்டு விசா மறுக்கப்பட்டது.

இது குறித்து ஊடகங்களிடம் பேசிய தீபச்செல்வன்,

"இலங்கையில் தொடர்ந்து வாழ வேண்டும் ஆசிரியர் பணி செய்ய வேண்டும் தொடர்ந்து இலங்கையில் இருந்து எழுத வேண்டும் என்பதுதான் என்னுடைய நோக்கம் என்று கூறிய போதும் அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் அதைப் பொருட்படுத்தவில்லை.

ஒடுக்கப்பட்ட இலங்கை மக்களின் குரலாய் இந்த மண்ணில் வாழ்ந்து உரிமைகளைப் பெறுவதே என் எண்ணம். அதற்கு ஜனநாயக தளத்தில் எம் பண்பாடுகள், அடையாளங்கள் சார்ந்த குரலை முன்வைக்கவே மாநாட்டுக்குச் செல்ல வேண்டும் என்று விரும்பினேன். ஆனால், பொருத்தமில்லாத காரணத்தைச் சொல்லி எனக்கு விசா வழங்க மறுத்துவிட்டார்கள். அமெரிக்கத் தூதரகமே மறுத்துவிட்டதால், இனி அயல்நாடான இந்தியாவுக்குச் செல்லவும் எனக்கு விசா வழங்கப்படுவது சந்தேகம்தான்" - என்று கூறினார்.




# தமிழர் தாயகத்தில் இந்துக்களின் எண்ணிக்கை குறைவடைகின்றது. புதிதாக பௌத்த ஆலயங்கள். பிரிட்டனில் அண்ணாமலை கவலை.



இலங்கையின் வடக்கு-கிழக்கில் இந்துக்களின் எண்ணிக்கை குறைவடைவது குறித்து தமிழ்நாடு பாஜக தலைவர் அண்ணாமலை கவலை வெளியிட்டுள்ளார்.

பிரிட்டன் நாடாளுமன்றத்தில் பிரபுக்கள் சபையில் ஆற்றிய உரையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கும், இந்தியாவிற்கும் இடையிலான உறவுகள் குறித்தும் அண்ணாமலை உரையாற்றியுள்ளார்.

பிரிட்டனின் தமிழ்ச் சங்கம் ஏற்பாடு செய்திருந்த இந்த நிகழ்வில் தமிழர் தாயகமான வடகிழக்குப் பகுதியில் இந்துக்களின் எண்ணிக்கை குறைவது குறித்து அண்ணாமலை கவலை வெளியிட்டுள்ளார்.

இலங்கையின் வடக்குகிழக்கில் இந்துக்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவிற்கு குறைவடைந்துள்ளமை எனக்கு கரிசனை அளிக்கின்றது என அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

இந்தப் போக்கு கவலையளிக்கும் விடயம் ஏனென்றால் எதிர்வரும் காலங்களில் இந்தப் பகுதிகளில் இந்துக்களின் கலாச்சாரத்திற்கு பெரும் பாதிப்பு ஏற்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

வடக்குகிழக்கில் பௌத்த தொல்பொருள் கட்டிடங்கள் உருவாகிவருவது குறித்தும் அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

பல ஆயிரம் வருடங்களாக இலங்கையின் வடக்குகிழக்கு தனிப்பட்ட கலாச்சாரம், அடையாளம் ஆகியவற்றை பேணிவந்துள்ளன, என தெரிவித்துள்ள அண்ணாமலை புதிதாக பௌத்த தொல்பொருள் கட்டிடங்கள் தமிழர் தாயகப் பகுதியில் உருவாகிவருவது ஈழத் தமிழர்களிற்கும் பௌத்தர்களிற்கும் இடையில் முறுகலை உருவாக்கியுள்ளது எனவும் அவர்தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் தசாப்தங்களில் நிரந்தரத் தீர்வை காண்பதற்கும் அமைதியை ஏற்படுத்துவதற்கும் இந்த பிரச்சினைக்கு தீர்வை காண்பது அவசியம் என அண்ணாமலை தெரிவித்துள்ளார்.















இப்பத்திரிகை 30.06.2023 அன்று அகரவ் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால், யாழ்ப்பாணம், கண்ணாதிட்டி வீதியில் 27ஆம் இலக்கத்திலுள்ள பணிமனையில் தயாரிக்கப்பட்டு, வெளியிடப்படுகிறது.